# போராட்டம்

2013 மே
மலர் 1 இதழ் 4
நன்கொடை: ரூபா 30/=



மே தினத்தில் வர்க்கத்தை ஆழமான கருத்தாடலுக்கு இட்டுச் செல்வோம் 08

காலாகாலமாக ஏமாற்றப்படும் மலையக தோட்டத் தொழிலாளர்கள் 10

ஒடுக்கப்பட்ட கரங்கள் மீண்டும் எழும் 12


# அரசாங்கம் கொடுத்த புத்தாண்டு பரிசு மக்களுக்கு "ஷொக்"!

**ஏப்ரல் 20ம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் விதத்தில் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. 2008 ம் ஆண்டு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கு அமைவாகவே மின் கட்டணத்தை அதிகரித்ததாக அரசாங்கம் கூறி-னாலும், நுகர்வோரை பாதிக்காத வரையில், பாவிக்கப்பபடும் மின் கூறுகள் 0 - 30 வரையிலும், 31 - 60 வரையிலும், 60 - 90 வரையிலும், 90 - 120 வரையிலும், என்ற ஒழுங்கு முறையின்படி மின் பாவனையை கணக்கிடும்படி உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியிருந்தது.**

ஆனால், அமுலுக்கு வந்துள்ள மின் கட்டணத்தின்படி, ஒரு நுகரவோன் பாவிக்கும் கடைசி கூறைச் சார்ந்த பகுதிக்குறிய மின் கூறின் கட்டணத்திலிருந்து மின் கட்டணம் நிச்சயிக்கப்படுகிறது. இதிலிருக்கும் இன்னொரு சிறப்பம்சம் என்னவென்றால், 90 கூறுகள் வரை மின்சாரத்தை பயன்படுத்துபவர்களின் மின் கட்டணம் அதிகரிக்கப்படுவதோடு, 91க்கும் அதிகமாக பயன்படுத்துபவர்களின் மின் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. நாங்கள் அறிந்த வகையில் 75 வீதமானோர் 90 கூறுகளுக்கும் குறைவாக மின்சாரம் பயன்படுத்துகின்றார்கள். அதில், 50 வீதமானோர் மின்சாரப் பற்றாக் குறையால் அல்லல்படுகிறார்கள். யார், எதை, எப்படிச் சொன்னாலும் , இறுதியாக, சிறு தொகையினரான தனவந்தர்களுக்காக பெருந்தொகையினரான ஏழைகளின் வயிற்றில் அடிக்கப்பட்டுள்ளது.

மக்களுக்கு நிவாரணம் பெற்றுத் தருவதாக பீற்றிக் கொண்டு திரியம் அரசாங்கம், மின் கட்டணத்தை இந்தளவு அதிகரித்திருப்பது மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கும் பரிசுத்த எண்ணத்துடன் தானா? என்ற பிரச்சினை எம் முன் நிற்கின்றது. மேதகு ஜனாதிபதியும் குறித்த விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரும் அது அப்படித்தான் என்று கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

கடந்த காலம் பூராவும் பணவீக்கம் அதிகரித்துக் காணப்பட்டது. பணவீக்கம் அதிகரிப்பு என்பது அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றமாகும். 2010ம் ஆண்டுதான் பணவீக்கம் அதிகரித்துக் காணப்பட்ட ஆண்டு. அந்த வருடம் நாட்டின் பணவீக்கம் 4.6 வீதமாகக் காணப்பட்டது. எப்படியிருந்தாலும் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் எதிர்வு கூறலுக்கு ஏற்ப 2013ல் நாட்டின் பணவீக்கம் 9 வீதம் வரை அதிகரிக்கக் கூடும். 2013 முதல் மூன்று மாதங்களை எடுத்துக் கொண்டால் பணவீக்கம் 8வீதத்திலிருந்து 8.8வீத அதிகரிப்பைக் காட்டுகிறது. இது மக்களின் அன்றாட வாழ்க்கையை பெரிதும் பாதிக்கிறது. மக்கள் வாங்கும்


**தொடர்ச்சி 15ம் பக்கம்**


## கூடங்குளம் அணு உலை இடை நிறுத்தம் இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவு

தமிழ் நாட்டின் கூடங்குளம் அணு உலையின் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறு இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக " வுாந ர்ளைெர" இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. ஏ. சுந்தரராஜன் என்பவரால் சமர்ப்பிக்கப்பட்ட மணு மீதான விசாரணையை மேற்கொண்ட கே.எஸ் ராதா கிருஸ்ணன் மற்றும் தீபக் மிஸ்ரா ஆகிய நீதிபதிகள் மேற்படி உத்தரவை பிறப்பித்துள்ளனர்.

இந்திய மின்வலு கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட கருவிகளின் தரம் சம்பந்தமாக பிரச்சினைகள் தோன்றியிருப்பதால், கூடங்குளம் அணு உலையில் கடமையில் ஈடுபட்டுள்ள மேலதிகாரிகள் பாரதூரமான பிரச்சினைகளை எதிர்க் கொண்டுள்ளதாக அந்த மணுவில் குறிப்பிடப்பட்டிருந்தது. கூடங்குளம் அணு உலையின் நடவடிக்கைகள் தொடங்கப்படுவதை எதிர்த்து கடந்த 21ம் திகதி கன்னியாகுமரியில் பாரிய ஆர்ப்பாட்டமொன்று நடந்தது. அதன்போது 146 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்கள்.

## சம உடைமைவாதிகள் மே தினத்திற்கு தயாராகிறார்கள்



முன்னிலை சோஷலிஸக் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்களை அறிவுறுத்தும் கண்கவர் வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாக கொழும்பு ஜிந்துப்பிட்டி வீதி மக்களை அறிவுறுத்தும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதன்போது எதிர்வரும் மே 1ம் திகதி சர்வதேச தொழிலாளர் தினத்தின் முக்கியத்துவம் குறித்தும், மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் குறித்தும் உரையாடப்பட்டது. இந்த நடவடிக்கைக்காக வீதி நாடகம், தெருப்பாடல்கள் போன்ற விஷேட நிகழ்வுகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன. சில இடங்களில் மக்கள் சந்திப்புகளும் நடந்தன. அதோடு மே தினம் சம்பந்தமாக துண்டுப் பிரசுரங்களும் விநியோகிப்பட்டன. இப்படியான நிகழ்ச்சிகள் இன்று முதல் 30ம் திகதி வரை நாடு பூராவும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக முன்னிலை சோஷலிஸ வட்டார தகவல்களிலிருந்து தெரிய வருகிறது.

## மீனவர்களுக்கு கிடைத்த வெற்றி

**பிரசன்ன அபேவிக்ரம**

மார்ச் மாதத்திலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எரிபொருள் மானியத்தை மீண்டும் பெற்றுக் கொள்ள முடிந்தமை ஒருங்கிணைந்த மீனவர்களுக்குக் கிடைத்த வெற்றியாகுமென, மீனவர் அமைப்புகள் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் பிரசன்ன அபேவிக்ரம கூறினார். ' போராட்டம்" பத்திரிகைக்கு கருத்து தெரிவித்த அவர் தொடரந்து கூறுகையில்,

" மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த எரிபொருள் மானியம் கடந்த மார்ச் மாதத்திலிருந்து நிறுத்தப்பட்டிருந்தது. நாடு பூராவுமுள்ள மீனவர் அமைப்புகளோடு அது குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்தி, மானியம் நிறுத்தப்பட்டதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்வதற்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தோம. அந்த ஆர்ப்பாட்டதிற்காக காலி, மோதரை, நீர்கொழும்பு, வென்னப்புவ ஆகிய பிரதேசங்களை தெரிவு செய்யப்பட்டிருந்தன".

" ஏபர்ல் 3ம் திகதி, நாங்கள் ஆர்ப்பாட்டம் செய்யப்போவதை ஊடக சந்திப்பொன்றை நடத்தி அறிவித்திருந்தோம். அதன் பின்னர், அரசாங்க அமைச்சர்களும், அவர்களின் செயலாளர்களும் ஆர்ப்பாட்ட நடவடிக்கையில் ஈடுபட வேண்டாமென தொலைபேசி மூலம் வேண்டுகோள் விடுத்தனர். இப்போது அவர்கள் எரிபொருள் மானியம் வழங்கும் அட்டைகளை அவசர அவசரமாக மீன்பிடித்துறை அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். அந்த அட்டைகளை விநியோகிப்பதற்கான முறையொன்றை ஏற்பாடு செய்யாமல், மீனவர்களை அழைத்து மானிய அடடைகள் கிடைத்திருப்பதாக கூறியுள்ளார்கள். எனவே எங்களது ஆர்ப்பாட்டத்தின் நோக்கம் நிறைவேறியதனால், நடத்தவிருந்த ஆர்ப்பாட்டத்தை நாங்கள் கைவிட்டு விட்டோம்.

என்றாலும், மார்ச் மாதத்திற்கான எரிபொருள் மானிய அட்டைகள் மாத்திரமே கிடைத்துள்ளன. சில பிரதேசங்களில் மீனவர்களுக்குக் கிடைக்க வேண்டிய மொத்த அட்டைகளும் இதுவரை கிடைக்கவில்லை. புத்தாண்டு முடிந்தவுடன் ஏப்ரல் மாதத்திற்கான மானிய அட்டைகள் தருவதாக அமைச்சர்கள் வாக்குறுதியளித்துள்ளார்கள். இல்லாளவிட்டால் மீனவர்களை ஒன்றிணைத்து நாடுபூராவும் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளோம்" என்று கூறினார்.

## சத்தியாக்கிரகத்தின் மீது பொலிஸார் தாக்குதல்




கொலொன்னாவ, மீதொட்டமுல்ல குப்பை மேடுக்கு அருகாமையில் அப்பிரதேச மக்களால் நடத்தப்பட்ட சத்தியாக்கிரகத்தை களைக்கும் நோக்கத்தில் பொலிஸார் மக்கள் மீரு தாக்குதல் நடத்தியுள்ளனர். கலகம் அடக்கும் போலிஸாரும், இராணுவத்தினரும் இந்தத் தாக்குதலை நடத்தியுளள்ளனர்.

குப்பை மேடுக்குச் செல்லும் பாதை மறைத்து அமைக்கப்பட்டிருந்த கூடாரத்திலேயே இந்த சத்தியாக்கிரகம் மேற்கொள்ளப்பட்டது. பொது மக்களுக்கு இடையூறு செய்யும் விதத்தில் அமைக்கப்பட்டிருந்த அந்தக் கூடாரத்தை அகற்றுமாறு பொலிஸாரினால் நீதி மன்றத்தில் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டது. பிரதேச மக்களின் சார்பபாக நீதிமன்றத்தில் கருத்து தெரிவித்த வழக்குரைஞர் நுவன் போபகே அவர்கள். குப்பை மேடுதான் மக்களுக்கு இடையூறாக இருப்பதாக சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போதே பொலிார் இந்த அடாவடித்தனத்தில் இறங்கியுள்ளனர்.

# போதும், போதும், என்று சொல்லும் காலம் வந்துள்ளது

அரசாங்கம் மக்கள் மீது தொடுக்கும் அழுத்தத்தைப் பார்த்தால் போதும், போதும் என்று சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக முன்னிலை சோஷலிஸக் கட்சி கூறுகிறது. முன்னியை சோஷலிஸக் கட்சியின் பிரதான அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அதன் பிரச்சாரச் செயலாளர் புபுது ஜயகொட மேற்கண்டவாறு கூறினார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

"மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ள விதத்தைப் பார்க்கும்போது கஷ்டப்படும் மக்களைப் பற்றி அரசாங்கம் எப்படி நினைக்கிறது என்பது தெரிகிறது. 90 அலகுகளுக்கு குறைவாக மின்சாரத்தை பாவிக்கும் மக்களின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதைவிட அதிகமாக பயன்படுத்தும் மக்களுக்கு குறைக்கப்பட்டுள்ளது. இலங்கை மக்கள் தொகையில் 74 வீதமானோர் 90 அலகுகளுக்கும் குறைவாகவே பயன்படுத்துவதாக அரசாங்கம் கூறுகிறது. அதனால், சாதராண பொது மக்கள் மின்சாரத்தை வீன் விரயம் செய்வதில்லை. மின் கட்டணம் கூடுதலாக அறவிடப்படுவது 30 அலகுகளுக்கும் குறைவாக பயன்படுத்தும் மக்களுக்குத்தான். இது இரண்டு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தெற்காசியாவிலேயே அதிகமான மின் உபகரணங்களை பயன்படுத்துவது இலங்கையர்கள்தான் என்று அரசாங்கம் கூறுகிறது. ஆனால் இதில் ஒரு பரஸ்பர வித்தியாசம் இருக்கிறது. அதிகமான மின் உபகரணங்கள் வாங்கப்பட்டிருப்பதைப் போன்றே, மின்சாரத்தை பயன்படுத்துவோரில் 74 வீதம் பேரும் 90 அலகுகளுக்கும் குறைவாகவே மின்சாரத்தை பயன்படுத்துகிறார்கள். வீட்டில் மின் உபகரணங்கள் இருக்க வேண்டும் என்று எண்ணி, வர்த்தக விளம்பரங்களை பார்த்து, உபகரணங்களை வாங்குகிறார்கள். ஆனால் அவற்றை பயன்படுத்துவதில்லை. மக்களால் எதுவுமே செய்ய முடியவில்லை. இப்போது மின் விளக்கை அணைத்துவிட்டு இருட்டில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஏப்ரல் 4ம் திகதி வரை மக்கள் கருத்தைக் கேட்டதாகவும் அதன் அடிப்படையிலேயே மின் கட்டணத்தை அதிகரித்ததாகவும் அரசாங்கம் கூறுகிறது. அது எதைப் போன்றதென்றால், நரகத்திற்கு சென்ற பின்னர் எப்படியான தண்டனை வேண்டுமென்று கடவுள் கேட்பதைப் போன்றதாகும். இப்படியான ஆலோசனைகளை வழங்கிய மக்கள் யாரென்பதை அறிய நாங்களும் ஆவலாகவே உள்ளோம்.



மத்தாப்பு சத்தத்துடனேயே அரசாங்கம் புத்தாண்டை தொடங்கியது. அதாவது, உதயன் பத்திரிகையை கொளுத்திவிட்டு. இப்போது புத்தாண்டில் வானவேடிக்கை காட்டுகிறது. மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டது. பஸ் கட்டணம் அதிகரிக்கப்படவிருக்கிறது. பொருட்களின் விலை உயர்ந்துக் கொண்டிருக்கிறது. அரசாங்கம் களியாட்டங்களை நடத்திக் கொண்டு மக்களுக்கு வித்தை காட்டிக் கொண்டிருக்கிறது.

அமைச்சர்கள் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பார்கள் என் எண்ணுவது தவறு. அமைச்சர்கள் இந்தப் பிரச்சினையின் பாரதூரத்தை உணரமாட்டார்கள். பஸ் பிரச்சினை அவர்களுக்கு இல்லை. அவர்கள் பஸ்களில் பயணிப்பதில்லை. மின் கட்டணம் அவர்களுக்கு பிரச்சினையில்லை. அவர்கள் மின் கட்டணம் செலுத்துவதில்லை. அவர்களுக்கும் சேர்த்து நாங்களே செலுத்துகிறோம்.

மக்கள் மீது பாரிய அழுத்தமொன்று பிரயோகிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. உற்பத்தி கிடையாது. மக்களிடமிருந்து அறவிடப்படும் வரிகளைக் கொண்டே அனைத்தும் பராமரிக்கப்படுகின்றன. கல்வி, சுகாதாரம் போன்றவற்றில் வெட்டு விழுகிறது. உர மானியம் வெட்டப்படுகிறது. தற்போது அநுராதபுரம், பொலன்னருவை, அம்பாறை போன்ற பகுதிகளில் சிறு நீரக நோய் பரவிக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு மருத்துவம் செய்வதற்காக என்று கூறி ஒரு மூடை உரத்தின் விலை 150 ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. விவசாய ரசாயணப் பொருட்களுக்கான செஸ் வரி 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும், 48 வயதுக்கும் கூடுதலான சிறுநீரக நோயாளர்களின் இரத்த சுத்திகரிப்பை நிறுத்திவிட்டு அவர்கள் மரணிக்க விடப்படுகிறார்கள். பகற் கொள்ளளையர்களின் ஆட்சி நாட்டில் நடந்துக் கொண்டிருக்கிறது. நவ தாராளமய முதலாளித்துவம் என்று சொல்வது இதற்குத்தான். ஆகவே இதற்கெதிராக மக்கள் செயலில் இறங்க வேண்டும். முன்னின்று செயற்படும் அரசியல் அமைப்புகளினால், செயலில் இறங்கும் மக்களுக்கு வழிகாட்ட முடியும். அதற்கான காலம் கனிந்துள்ளது" என்று கூறினார்.

# உதயன் தாக்கப்பட்டமை- பொறுப்பிலிருந்து அரசாங்கம் ஒதுங்க முடியாது

**சம உரிமை இயக்கம்**

யாழ். உதயன் பத்திரிகை காரியாலயம் குண்டர்களினால் தாக்கப்பட்டமை தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள சம உரிமை இயக்கம், இந்தத் தாக்குதல் சம்பந்தமான பொறுப்பிலிருந்து அரசாங்கம் ஒதுங்க முடியாதென குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை மேலும் குறிப்பிடுகையில், " ஏப்ரல் 13ம் திகதி அதிகாலை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள உதயன் அச்சகத்தை குண்டர்கள் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். இதற்கு முன்னர் ஏப்ரல் 03ம் திகி இரவு கிளிநொச்சியில் அமைந்துள்ள உதயன் பத்திரகை காரியாலயத்திற்குள் நுழைந்த குண்டர்கள் அதன் சொத்துக்களை சேதப்படுத்தினர். உதயன் பத்திரிகையின் கூற்றுக்கு ஏற்ப, இது வரை 32 முறை உதயன் பத்திரிகை தாக்கப்பட்டுள்ளது. இது 33வது தாக்குதலாகும். அரசாங்கத்திற்கு உடன்பாடில்லாத செய்திகளை பிரசுரிக்கும் ஊடகங்களுக்கு எதிராக தொடுக்கப்பட்டு வரும் கீழ்த்தரமான அடக்குமுறைக்கு இது சிறந்த உதாரணமாகும்.

இதற்கு முன்னர் கிளிநொச்சி காரியாலயத்தின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் சிங்களம் பேசிய நபர்களாலேயே மேற்கொள்ளப்பட்டதாக கண்கண்ட சாட்சிகள் கூறுகின்றன. இராணுவம் பெருமளவில் குவிக்கப்பட்டிருக்கும் கிளிநொச்சியிலும், யாழ்ப்பாணத்திலும் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களின் பொறுப்பிலிருந்து அரசாங்கம் விலகயிருக்க முடியாது. அரசாங்கத்தின் நேரடியான அல்லது மறைமுகமான ஒத்துழைப்போடு செயற்படும் குண்டர்களே இந்தத் தாக்குதலை மேற்கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் தேசியப் பிரஜைகள் மத்தியிலும், தமிழ் நாடடுக்கும் இலங்கைக்குமிடையிலும் கசப்புணர்வுகள் மேலோங்கியிருக்கும் நிலையிலேயே இவ்வாறான செயல்கள் நடந்துக் கொண்டிருக்கின்றன. தமிழ் மக்கள் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் செயற்படும் இனவாதத்தின் பக்கம் இழுபடுவதை தடுப்பதாயிருந்தால், சமத்துவத்தின் அடிப்படையில் உருவாக்கப்படும் ஒருமைப்பாடு மற்றும் மக்களின் ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படும் சூழ்நிலையை உருவாக்க வேண்டியது அத்தியாவசியமாகும். அதற்காக சிங்கள, தமிழ், முஸ்லிம் அனைத்து மக்களினதும் ஒருமைப்பாடு கட்டாயமாகத் தேவைப்படுகிறது.

மேற்படி சம்பவங்களைப் பார்க்கும்போது தமிழ் மக்களை இனவாத மற்றும் அடிப்படைவாதத்தின் பக்கம் திசை திருப்புவதற்கு அரசாங்கம் செயற்பட்டுக் கொண்டிருக்கிறதேயல்லாமல், அவர்களுடனான நல்லிணத்தை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கத்தோடு செயற்படுவதில்லை என்பது தெரிகிறது. இந்த நிலை இப்படியே தொடர்ந்தால் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கு மத்தியிலான இடைவெளி அதிகரித்து மீண்டுமொரு இனவாத யுத்தத்திற்குள் இந்த நாட்டு மக்கள் தள்ளப்படுவதை தவிர்க்க முடியாது போகும்.

இவ்வாறு மறைமுகமாக மேற்கொள்ளப்படும் காடைத்தனத்தால் இலங்கை இனக் குழுமங்கள் மத்தியில் மோதல்களை ஏற்படுத்துவதற்கும், வடக்கில் ராணுவ ஆட்சியை தொடர்ந்து அமுல் படுத்துவதற்கும் அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு எதிராகவும் சிங்கள, தமிழ், முஸ்லிம் ஒடுக்கப்பட்ட மக்களுக்கிடையிலான ஒன்றிணைந்த போராட்டத்திற்கு அணிதிரளுமாறு அனைத்து மக்களிடம் கேட்டுக் கொள்கிறோம். உதயன் பத்திரகை மீதான தொடர் தாக்குதல்களை நிறுத்துவதற்கும், இந்த தாக்குதலோடு சம்பந்தப்பட்டவர்களை வெளிச்சத்திற்கு கொண்டுவருவதற்காக ஒன்று சேர்ந்து தலையிடுமாறும் ஊடகவியலாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட ஜனநாயகத்தை மதிக்கும் அனைவரிடமும் கேட்டுக் கொள்கின்றோம்.



# மௌனம் காக்கும் நேரமா? குரலெழுப்பும் நேரமா?

நீறு பூத்த நெருப்பு போல் இந்த அமைதிக்கு உள்ளே மறைந்து கிடக்கும் பல்வேறு சூழ்ச்சிகள் ரகஸியமாகவே வளர்ந்துக் கொண்டிருக்கின்றன. தமிழ் நாட்டில் நடக்கும் சிங்கள எதிர்ப்பும், இலங்கையில் சிங்கள மக்கள மத்தியில் நிலவும் தமிழ், முஸ்லிம் எதிர்ப்பும் அமைதியாக சுடர்விட்டுக் கொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் பெரியதொரு பேரழிவை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் இது கொழுந்து விட்டு எரிய கூடிய ஆபத்தும் அந்த அமைதிக்குள் இருப்பதாகத் தெரிகிறது. இந்தப் பிரச்சினையிலுள்ள சிறப்பம்சம் என்னவென்றால் இது குறித்து காக்கப்படும் அமைதிதான். அரசாங்கம் தனது அரசியல் சூதாட்டத்திற்காக இந்த சூழ்ச்சிகளை உரமிட்டு வளர்த்து வருவது தெரிகிறது. இந்த நிலைமையில் எதிர்க்கட்சிகள் இஞ்சி தின்ற குரங்குகளைப் போல் செய்வதறியாது நிலை தடுமாறிப் போயிருக்கின்றன. சிலர் இந்தப் பிரச்சினையை வைத்து சதுரங்கம் ஆடிக்கொண்டு இருப்பதும் தெரிகிறது. இந்த துயர்மிகு சந்தர்ப்பத்தில் என்ன நடக்கப் போகிறது? ஒருவேளை நடக்கக் கூடாத ஏதோவொன்று நடந்துவிடும். அல்லது எரிமலை எந்த நிமிடத்திலாவது வெடித்துவிடுடிமோ என்ற அச்ச நிலைமக்கள் மத்தியில் உருவாகியிருக்கிறது. அந்த எரிமலையின் அடிவாரத்திலிருந்து இந்த கட்டுரை எழுதப்படுகிறது.

பெசன் பக் சம்பவம்

மார்ச் 28ம் திகதி முஸ்லிம் வியாபாரியொருவருக்கு சொந்தமாக பெபிலியானவில் அமைந்துள்ள வர்த்தக நிலையமொன்றை 100 பேர் கொண்ட கோஷ்டியொன்று தாக்கியது. அந்தத் தாக்குதலின் போது வர்த்தக நிலையத்திற்குச் சொந்தமான வாகனம், சொத்துக்கள் உட்பட நிறுவனமும் பாரிய சேதத்திற்கு உள்ளானது. சம்பவத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் உட்பட நிறுவன ஊழியர்கள் சிலரும் தாக்குதலுக்கு உள்ளாகினார்கள். அரசாங்கமும், பொலிஸும் சம்பவத்தை மூடி மறைப்பதற்கு ஆரம்பத்திலிருந்தே முயற்சி செய்தன. இது மதவாத அல்லது இனவாத செயல் அல்லவென்றும், ஒரு முஸ்லிம் இளைஞனுக்கும், சிங்கள யுவதிக்குமிடையிலான தொடர்பு இதன் பின்னணியில் இருப்பதாகவும் பொலிஸாரின் அனுசரணையோடு ஆரம்பத்திலிருந்தே கூறப்பட்டது. 'பொது பல சேனா', 'சிங்கள ராவய' போன்ற சிங்கள இனவாத அமைப்புகள் தமக்கும் இந்த தாக்குதல் சம்பவத்திற்கும் தொடர்பில்லையென அறிக்கை விடுவதில் முந்திக் கொண்டன. அரசாங்கமும், எதிர்க்கட்சியும், சில ஊடகங்களும் இந்த சம்பவத்தை மூடி மறைக்க முயற்சி செய்தமையும் நாடறிந்த விடயமாகும்.

இவ்வாறான இனவாத சம்பவங்களின் போது , கடைசி நிமிடத்தில் நடந்த சம்பவத்தையோ, அதனை ஏற்பாடு செய்து வழி நடத்தியது யார் என்பதையே முக்கியமாக கவனிக்க வேண்டியதில்லை. ஒரு நாயை அடித்த சம்பவம்தான் இந்தியாவில் 'இந்து - முஸ்லிம் கலவரத்திற்கு காரணமாக இருந்தது. இனவாதத் தீயை எரிய விட்ட பின்பு அது கொழுந்துவிட்டு எரிய ஒருசில நொடிகளே போதும். இந்த சம்பவத்தின்போது அது தூண்டப்படுவதற்கு காரணமாக இருந்தவர்கள் எதுவுமே நடக்காதது போல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். சம்பவமொன்று நடந்துவிட்ட பின்பு மதவாதத்தையும் இனவாதத்தையும் வளர்த்துவிட்ட அமைப்புக்கள் பொறுப்பிலிருந்து ஒதுங்குவது நகைப்புக்குரிய விடயமாகும். இனவாதத்தையும் மதவாதத்தையும் சமூகத்திற்குள் புகுத்திய பின்னர், வெறிபிடித்த நாயொன்றை அவிழ்த்துவிட்டால் என்ன நடக்குமோ அதுதான் நடக்கும். நாயை அவிழ்த்து விட்டவர்களால் கூட அதை கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும். இனவாத விஷம் செலுத்தப்பட்ட பின்னர் விஷ மேற்றிய இனவாதத் தலைவர்களுக்கு வேண்டியவாறு அவர்கள் நடந்துக கொள்வதில்லை. அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது. பெஷன் பக் தாக்குதல் சம்பவத்தோடு பொது பல சேனாவிற்கோ வேறு அவ்வாறான அமைப்புக்கோ தொடர்பு இல்லாவிட்டாலும்கூட், அவ்வாறான மனநிலையை சமூகத்தில் வளர்த்தமைக்கான பொறுப்பு பொது பல சேனாவையே சாரும். மேற்படி சம்பவத்தை வழிநடத்தியது பொது பல சேனாதான் என்ற உண்மை பின்னர் வெளிச்சத்திற் வந்தது. பெபிலியானவில் குறித்த வர்த்தக நிலையத்தை கொளுத்துவது மட்டுமல்ல, அப்பிரதேசத்திலுள்ள அனைத்து முஸ்லிம்களையும் அடித்து விரட்டுவதற்கே அவர்கள் திட்டமிட்டிருந்தார்கள். 83 கறுப்பு ஜுலையைப் போன்று நிகழவிருந்த ஒரு சம்பவம் நூலிழையில் தப்பியது ஆச்சரியம்தான்.

> **“83 கறுப்பு ஜுலையைப் போன்றதொரு சம்பவம் நடக்கக் கூடிய நிலை உருவாகும்போது சொத்துக்களை பாதுகாக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.”**

இந்த இனவாத அமைப்புகளின் பின்புலத்தில் அரசாங்கம் செயற்பட்டதற்கான சான்றுகள் அரசாங்கம் நடந்துக் கொண்ட முறையிலிருந்து தெரிய வந்தது. சம்பவம் நடந்த சில நாட்களுக்குப் பின்னர் இதனுடன் தொடர்புடைய இரண்டு பேர் மாத்திரமே கைது செய்யப்பட்டனர். இறுதியாக கைது செய்யப்பட்ட மற்றும் சரணடைந்தவர்கள், காவி உடை தரித்த மூன்று பேரையும் சேர்த்து 17 நபர்களாகும். இந்த 17 நபர்களுக்கும் எதிரான வழக்கு கங்கொடவில நீதவான் நீதிமன்றத்தில் ஏப்ரல் 2ம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அங்கே எல்லோரையும் வியக்க வைத்த ஒரு சம்பவம் நடந்தது. பொலிஸாரின் அனுமதியோடு இரு சாராரினதும் இணக்கப்பாட்டுடன் வழக்கு சமாதானமாக முடித்து வைக்கப்பட்டது. சந்தேக நபர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். 83 கறுப்பு ஜுலையைப் போன்றதொரு சம்பவம் நடக்கக் கூடிய நிலை உருவாகும்போது சொத்துக்களை பாதுகாக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால், அங்கு குவிந்திருந்த பொலிஸார் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். நீதிமன்றத்தில் வழக்கை இணக்கப்பாட்டோடு முடித்துக் கொள்வதற்கு வேண்டிய அனைத்தையும் பொலிஸார் செய்திருந்தனர். மேற்படி வர்த்தக நிலைய உரிமையாளரை இணக்கப்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.இருந்தது அரசாங்க மேலிடத்திலிருந்து வந்த அச்சுறுத்தலுடனான தொலைபேசி அழைப்புதான் இணக்கத்திற்கு வரக் காரணம் என தகவல்கள் கூறின. சொத்துக்களை சேதப்படுத்தியமை மற்றும் நபர்களுக்கு காயத்தை உண்டாக்கியமை, இலங்கையில் அமுலில் இருக்கும் சட்டத்திற்கமைய குற்றச் செயலாக இருப்பதோடு, இப்படியான குற்றச் செயல்களை புரிவோர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். இணக்கத்தின் மூலம் வழக்கை சமாதானமாக தீர்த்து வைக்க முடியாது. அமுலிலிருக்கும் சட்டத்தைக்கூட மதிக்காமல், சர்வாதிகார பராக்கிரமத்தின் மகிமையால் சட்டம் எப்படியெல்லாமோ தெசயற்பட்டுக் கொண்டிருப்பது நாடறிந்த உண்மையாகும்.

இதற்குப் பிறகு என்ன நடக்கும்?

தீ மூட்டப்படும் இனவாதமும் மதவாதமும் இத்தோடு நின்றுவிடப் போவதில்லை. ஹலால் எதிர்ப்பு பரவலாகி வரும்போது, ஹலால் எதிர்ப்பிற்குள் மறைந்துக் கொண்டு வருவது முஸ்லிம் எதிர்ப்புதான் என்பதையும், முஸ்லிம் எதிர்ப்பின் பின்புலத்தில் இருப்பது வஞ்சகமும் இனவாத சூழ்ச்சியும்தான் என்பதை நாங்கள் ஏற்கனவே வெளிப்படுத்தினோம். இப்போது முஸ்லிம் மக்களை மண்டியிட வைத்து ஹலால் நீக்கப்பட்டுள்ளது. ஆனால், பிரச்சினை ஹலாலோடு முடிந்துவிடப் போவதில்லை. தமது அடுத்த இலக்கு முஸ்லிம் பெண்களின் பர்தாவை தடை செய்வது தான் என்று பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் ஏப்ரல் 2ம் திகதி காலையில் நெத் எப்.எம் வானொலி செய்திக்கு கூறினார். வானொலியில் ஒலிபரப்பான செய்திக்கு அமைய முட்டாள்களின் தினம் என்று பெரும்பாலானோரால் அறியப்படும் ஏப்ரல் முதலாம் திகதி இரவு பொது பல சேனாவின் சிறப்பு நிர்வாகக் குழு கூட்டமொன்று நடந்திருக்கின்றது. அதன்போது, முஸ்லிம் பெண்களின் உடையை இலக்காக வைத்து கோபமூட்டக் கூடிய நடவடிக்கையொன்றை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அது சம்பந்தமான கருத்துக்களை கண்டறிவதற்கு குழுவொன்றும்

தொடர்ச்சி 15ம் பக்கம்



# 71 மகத்தான தோல்வி சமூகத்திற்கு விட்டுச் சென்ற கற்பிதங்கள்

1971 ஏப்ரல் மாதம் 4ம் திகதி. பிற்பகல் 2.00 மணியிலிருந்து இலங்கை வானொலி நிகழ்ச்சிகளுக்கு இடையே ஒரு அறிவித்தல அடிக்கடி வெளியிடப்படுகிறது. நாடு முழுவதும் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக அந்த செய்தி கூறியது. இந்நாட்டு மக்கள் என்றுமே எதிர்பார்த்திராத செய்தி அது. என்ன நடக்கிறது என்று யாருக்குமே தெரியவில்லை. “ நாட்டில் சட்டபூர்வமான அரசாங்கத்தை கவிழ்த்து விட்டு ஆட்சியைப் பிடிப்பதற்காக பயங்கரவாதிகள் ஆயுதங்களுடன் பொலிஸ் நிலையங்களை தாக்கி அந்த பிரதேசங்களில் நிர்வாகத்தை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காக போரடி வருகிறது. அவர்களை முறியடிக்க அரசாங்கம் தன்னாலான அனைத்தையும் செய்ய தயாரக உள்ளதாக அந்த செய்தி மேலும் கூறியது.

மறுநாள் ஊரடங்குச் சட்டம் ஓரளவு தளர்த்தப்பட்டது. மக்கள் மத்தியில் பரவலான ஒரு பேச்சு அடிபட்டது. இது என்ன ஆயுதப் போராட்டம்? ஆயுதமேந்திப் போராடும் அந்த இளைஞரகள் யார்? அவர்கள் எதற்காக ஆயுதமேந்த வேண்டும்? என்ற பேச்சுக்கள் நாடு பூராவும் அடிபட்டன.

ஆம்! யார் அவர்கள்? எதற்காக போராடுகிறார்கள்? அதுதான் கேள்வி.! இலங்கை வரலாற்றில் என்றுமே காணாத எழுச்சி. முதலாளித்துவத்திற்கு எதிராக, சுரண்டலுக்கு எதிராக, சமூக ஒடுக்கு முறைக்கு எதிராக நடந்த அந்த தீரமிக்க இளைஞர்களின் எழுச்சி அன்றைய முதலாளித்துவ அரசாங்கத்தை ஆட்டங்காண வைத்ததோடு மாத்திரமல்ல, முதலாளித்துவத்தின் முந்தானையில் தொங்கிக் கொண்டிருந்த இடதுசாரி வேடதாரிகளையும் கிலி கொள்ளச் செய்தது. தமது வர்க்கத்தின் இருப்பிற்கு எங்கே ஆபத்து வந்துவிடுமோ என்று பயந்த, அன்றைய எதிரிக் கட்சியிலிருந்து அரசாங்கத்திற்குள் நுழையக் காத்திருந்த திருவாளர் ஜே. ஆர். ஜயவர்தன, ” இது சேகவேராக்களின் வேலை. இவர்களை பூண்டோடு ஒழித்துக் கட்ட அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார்” என்று கூறினார்.

ஆகவே 71 ஏபரல் கிளர்ச்சி என்பது இலங்கை அரசியலில் தவிர்த்துச் செல்ல முடியாத ஒன்றாக இருக்கின்றது. 1971 ஏப்ரலில் ஆரம்பான அந்தப் போராட்டம் முதலாளித்துவ அரசாங்கத்தினால் சில மாதங்களிலேயே மிகக் கொடூரமான முறையில் அடக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். யுவதிகள் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள். ஆயிரக்கணக்கான இளைஞர்கள் சிறைப்படுத்தப்பட்டு கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டார்கள். இலங்கை வரலாற்றில் பல்வேறு காலகட்டங்களில் கிளர்ச்சிகள் தலைதூக்கியிருந்தாலும் அந்த கிளர்ச்சிகள் யாவும் ஒரு ஆட்சியாளனை தூக்கி வீசிவிட்டு இன்னொரு ஆட்சியாளனை அதிகாரத்தில் அமர்த்துவதற்காக“ அரண்மனைகளின்” சதிகளாகவே இருந்தன. 71 புரட்சி அதற்கு முற்றிலும் மாற்றமான ஒடுக்கப்பட்ட மக்களிடம் ஆட்சி அதிகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக நடத்தப்பட்ட முதல் மக்கள் புரட்சியாகும். உலக கம்யூனிஸ இயக்கத்திற்கு 1871 பாரிஸ் கம்யூனினால் பெற்றுக் கொடுத்த அனுபவங்களுக்கு கொஞசமும் குறைவில்லாத படிப்பினைகளை 1971 புரட்சி இலங்கையின் இடதுசாரி இயக்கத்திற்கு பெற்றுக் கொடுத்தது. 1971 ஏப்ரல் போராட்டம் வரலாற்றிற்கு பல் படிப்பினைளை பெற்றுத்தந்த மாபெரும் தோல்வியாகும். 1905ல் இந்த பயிற்சி கிடைக்காமிருந்தால் 1917 அக்டோபர் புரட்சி ஒருபோதும் வெற்றி பெற்றிருக்க முடியாது. 1905 மாபெரும் தோல்வி குறித்து லெனின் இவ்வாறு கூறினார்,

“ புரட்சிவாத கட்சிகளுக்கும் புரட்சிவாத கட்சிக்கும் சரியான மற்றும் மிகவும் பயனுள்ள பாடத்தை, வரலாற்றில் இயங்கியல் முறை குறித்த பாடத்தை, அரசியல் போராட்டத்தை புரிந்து கொள்வதற்கும் போராடும் கலையையும், விஞ்ஞானம் குறித்த பாடத்தையும் இந்த மாபெரும் தோல்வியே கற்பித்தது”.

லெனின் திரட்டிய நூல் பகுதி 6- பக்கம் 137-138

ஆகவே 71 வீரர்களின் அந்த போராட்டத்தை குறைத்து மதிப்பிட முடியாது. அவர்களது போராட்டம் முதலாளித்துவக் கொள்ளைக்கார பொருளாதாரத்தின் சரிவை தடுத்து நிறுத்துவதற்கான போராட்டமாக இருக்கவில்லை. சரிந்து வரும் முதலாளித்துவ சமூக முறைக்கு முட்டுக் கொடுப்பதற்காக அவர்கள் போராடவில்லை. ஒரு கொள்ளைக்காரனுக்கு பதிலாக இன்னொரு கொள்ளைக்காரனை ஆட்சிக்கட்டில் ஏற்றும் இணக்க அரசியலுக்காக அவர்கள் போராடவில்லை. மாறாக, முதலாளித்துவத்தின் அனைத்து சாதனங்களையும் தூக்கி எறிந்துவிட்டு, இந்நாட்டில் சமவுடமை சமுதாயமொன்றை அமைத்திட வேண்டும் என்ற தூய நோக்கத்திற்காகவே அவர்கள் போராடினார்கள். அதற்கான திடசங்கற்பம் அவர்களிடமிருந்தது.

71 போராட்டத்தின் சிறப்புத் தன்மை என்னவென்றால், அரச அதிகாரம் பற்றிய பிரச்சினையை முக்கிய பிரச்சினையாக எடுத்துக் கொண்டமைதான். போராட்டத்தின் இலக்கு அரசாங்கத்தை தாக்கி அரச அதிகாரத்தை தமது வர்க்கத்திடம் பெற்றுக் கொள்வதுதான். என்றாலும் அரசாங்கத்தை தாக்கியது, பொலிஸ் நிலையங்களை தாக்கியது வரை அந்தப் போராட்டம் குறுகியது குறித்து விமர்சனங்கள் இருந்தாலும் கூட, அரச அதிகாரம் சம்பந்தமான பிரச்சினையை முதலாவது பிரச்சினையாக எடுத்துக் கொண்ட அந்த பரம்பரை குறித்து ஆழமான வாசிப்பை மேற்கொள்ள வேண்டும். மறுபுறம் அவர்கள் புரட்சி என்பதை சமூக கட்டமைப்புகளை, நிர்வாக இயந்திரம் மற்றும் அரச நிறுவனங்களை மாற்றியமைப்பதை மாத்திரமல்ல, சமூக மதிப்பீட்டுத் தொகுதிகள், சமூக உறவுகள், சிந்தனை, மனோபாவம் போன்றவற்றிலிருந்து மக்களை மீட்டெடுப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தார்கள். மூட்டை சுமந்தாவது கட்சி நிதியை வலுப்படுத்தல், முழுநேர புரட்சிவாதியின் எடுத்துக்காட்டு, போராட்டத்தின்போது கடைபிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகள் போன்ற அனைத்தையும் எமக்கு கற்றுத் தருவது வித்தியாசமான புரட்சிகர வழக்காறுகள் விடயத்தில் அவர்களுக்கிருந்த பிணைப்புதான். அது எதிர்கால புரட்சிகர செயற்பாடுகளிடம் கையளிக்கும் முழுமையான சொத்தாக இல்லாவிட்டாலும், அது பெருமதிப்பு வாய்ந்த சொத்துதான் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.


> **“ அவர்களது போராட்டம் முதலாளித்துவக் கொள்ளைக்கார பொருளாதாரத்தின் சரிவை தடுத்து நிறுத்துவதற்கான போராட்டமாக இருக்கவில்லை. ”**

71 போரட்டத்தை முதலாளித்துவ அரசாங்கத்தின் அடக்குமுறைக்குள் மாத்திரம் உள்ளடக்கிவிட முடியாது. இலங்கையில சேஷலிஸத்தை கட்டியெழுப்புவது குறித்த எதிர்பார்ப்பு அதில் காணப்பட்டது. என்ன விலை கொடுத்தாவது முதலாளித்துவத்தை மூட்டை கட்டி அனுப்பிவிட்டு திருநாட்டில் சமவுடமை சமுதாயத்தை நிலைநாட்டியே தீருவது என்ற திடசங்கற்பம் அங்கே காணப்பட்டது. நாடு எதிர்கொண்டுள் அனைத்து பிரச்சினைகளுக்கும் காரணமான முதலாளித்துவ சுரண்டலை கூண்டோடு ஒழித்துக் கட்டிவிட்டு பாட்டாளி வர்க்கத்தின் கைகளுக்குள் ஆட்சியை கொண்டுவந்து இந்தாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் சமத்துவம், சமநீதி, சமஉரிமையை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நெஞ்சுறுதி அங்கே இருந்தது.

இலவசக் கல்வியின் மூலம் படித்த கிராமப்புற இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்ட அந்தப் புரட்சி, இளைஞர்கள் எதிர்கொண்ட வேலையில்லா திண்டாட்டத்தையும், ஒடுக்ப்பட்ட பாட்டாளி வர்க்க மக்களின் தலைவிதியையும் மாற்றுவதற்கான ஒரே வழி புரட்சி ஒன்றுதான் என்ற நிலையிலேயே நடந்தது. என்றாலும் புரட்சியின் நோக்கம், அதன் இலக்கு என்பவற்றை பற்றி மக்கள் அறிவுறுத்தப்படாத நிலையில் அந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டாலும் கூட, நெஞ்சுறுதி கொண்ட அந்த 71 வீரர்களின் போராட்டம், முதலாளித்துவ 71ன்

தொடர்ச்சி 15ம் பக்கம்

மாக்சியம்-04



# மார்க்சியம் சமூக விஞ்ஞானமானது எதனால்?

மனிதர் வாழ்வதற்கு அவசியமான பொருட்களைப் பெறுவதற்கான மனித உழைப்புக்கும், நுகர்வுக்குமிடையிலான முரண்பாடுகள் பற்றி முரணற்ற வகையில் விளக்குகின்றது மார்க்சியம். உழைப்பு மற்றும் நுகர்வில் இருந்து மனிதனை அந்நியமாக்கும் முரண்பாடுகள், மனித உறவுகளை வர்க்கரீதியான உறவாக்குகின்றது. மனிதனுக்கு எதிரான இந்த தனிவுடமை சமூக அமைப்பை, மார்க்சியம் தலைகீழாகப் புரட்டிக் காட்டுகின்றது. சாராம்சத்தில் மனித வாழ்விற்கான வர்க்கப் போராட்டமாகவே மனித வாழ்வு இருப்பதை மார்க்சியம் எடுத்துக் காட்டுவதால், மார்க்சியம் ஒரு சமூக விஞ்ஞானமாக இருக்கின்றது. மார்க்சியம் ஒரு சமூக விஞ்ஞானமே ஒழிய, வெறும் அறிவு சார்ந்த தத்துவமல்ல. வர்க்கப் போராட்டத்தின் மீதான இயங்கியல் தான் மார்க்சியம். வர்க்கங்களற்ற சமுதாயத்தை படைக்கும் போராட்டமாகவே வாழ்வுக்கான மனிதப்போராட்டம் இருப்பதை, சமூக விஞ்ஞானமான மார்க்சியம் முரணற்ற வகையில் முன்வைத்து அமைப்பாக்கி இருக்கின்றது.

வர்க்கப் போராட்டத்துக்கு அடிப்படையான தனிவுடமை சமூக அமைப்பு, மனித உழைப்பிலான பொருள் மீதான தனிவுடைமையில் இருந்தே உருவானது. இது மனிதனை வாழ்விற்கான அவனின் உழைப்பில் இருந்தும், உழைப்பிலான நுகர்பொருளிலிருந்தும் அந்நியமாக்கி இருக்கின்றது. இது உருவாக்கும் வர்க்க முரண்பாடுகள் வர்க்கப் போராட்டமாகவும், வர்க்கப் போராட்டங்கள் சமூகங்களுக்கு இடையிலான முரண்பாடுகளாகவும் வெளிப்படுகின்றது. மார்க்சியம் இதை முரணற்ற வகையில் எடுத்துக்காட்டுவதுடன், பொதுவுடமை கொண்ட சமூக அமைப்பாக புரட்டிப் போட வழிகாட்டுகின்றது. மனித உழைப்பிலான உற்பத்தி மீது உழைப்பவனின் உரிமையைக் கோருவதுடன், அதன் மீதான சமூகத் தன்மையை (மீள) நிலைநாட்டக் கோருகின்றது. தனிவுடமைக்கு பதில் பொதுவுடமையாக்கக் கோருகின்றது. இதன் மூலம் சமூகம் சார்ந்த ஒன்றாக, மனித வாழ்வியலை மாற்றியமைக்கக் கோருகின்றது.

இயற்கையைச் சார்ந்து தான் மனிதன் இருக்க முடியுமே ஒழிய, மனிதன் சார்ந்து இயற்கை இருப்பதில்லை. இயற்கையின்றி மனித வாழ்வில்லை. இயற்கை மீதான மனித உழைப்பின்றி மனித வாழ்வில்லை. மனிதனாக இருப்பதற்கும், வாழ்வதற்கும் உழைப்பு அனைவருக்கும் அடிப்படையானது. இந்த இயற்கையையும் மனித உழைப்பையும் தனிவுடமையாக்குவதும், உழையாமல் மற்றவன் உழைப்பை சுரண்டி வாழ்வதும், இயற்கைக்கும் மனித குலத்துக்கும் எதிரானது.

இன்றைய மனிதவாழ்வின் மீது தனிவுடமை உருவாக்கும் சமூக முரண்பாடுகள் பற்றி மார்க்சியம் பேசுகின்றது. சமூக அவலங்கள் ஏன், எப்படித் தோற்றுகின்றது என்பதை, முரணற்ற வகையில் ஆராய்கின்றது. தனி மனிதனுக்கு பதில் சமூகத்தை முன்னிறுத்தி அணுகுகின்றது. தனிவுடமைக்கு பதில் சமூகவுடமையை முன்னிறுத்தி ஆராய்கின்றது. சமூகத்தைப் புரட்டிக் காட்டி, நடைமுறையுடன் புரட்டிப் போட வழி காட்டுகின்றது.

இந்த வகையில் மனித சமூகத்தினது உழைப்பு சார்ந்த அறிவுச் செல்வத்தில் இருந்து, அறிவியல் பூர்வமாக அறிவுக்கு உகந்ததை முரணற்ற வகையில் சாரமாக பிழிந்து அளிக்கப்பட்ட தத்துவம் தான் மார்க்சியம். இதற்கு முந்தைய தத்துவங்கள் அனைத்தும் உலகத்தை விமர்சிக்கவும் விளக்கவும் மட்டுமே செய்தன. ஆனால் மார்க்சியம் இதை மட்டும் செய்யவில்லை, அதை மாற்றவும் கோருகின்றது. அதாவது வர்க்க சமூகத்தின் வர்க்கப் போராட்டத்தை தன்வசப்படுத்தியதன் மூலம், மனிதவாழ்விற்கான போராட்டத்துடன் மார்க்சியம் ஒன்றிணைந்துவிட்டது.

இந்த வகையில் மார்க்சியத் தத்துவம், அரசியல், பொருளியல், மதம், அறிவியல், சமூகம், கலை, இலக்கியம், பண்பாடு, போராட்டம் .. என அனைத்தையும் விமர்சனபூர்வமாக அணுகி விளக்குவதுடன், மாற்றத்துக்கு வழிகாட்டும் தத்துவமானது.

சமூகத்தின் எல்லாத் தளத்திலும் தன்னை முன்னிறுத்தி முரணற்று அணுகுவதும், மாற்றத்துக்கு வழிகாட்டுவதால், சமூக விஞ்ஞானமாகவே மார்க்சியம் மிளிர்கின்றது.

சமூகத்தில் நிலவும் மாயையான வெளித்தோற்றத்தை நியாயப்பபடுத்தவில்லை. அதை அனுதாபத்துடன் காட்டி அணுக முற்படவில்லை. அதைக் கண்டு களிப்பு கொண்டு கொண்டாடவில்லை. மாறாக இவை முரணாக தோன்றுவதற்கான காரணகாரியங்களை கண்டறிந்ததன் மூலம், மாற்றுவதைக் கோருகின்றது.



இந்த சமூகம் ஏன் இப்படி முரணாக இயங்குகின்றது என்று தேடிய மார்க்ஸ், தனது இளைமைக் காலத்தில் தன் காதலியான ஜென்னிக்கு எழுதிய கவிதையில் இதை வெளிபடுத்துகின்றார்.

”என்னைக் கட்டிய தலைகளை நொறுக்கி எழுந்தேன்
எங்கே செல்கிறாய்? எனக்கொரு உலகம் தேடி!
இங்கே அகன்ற பசும்புல் வெளிகளும்
கீழே கடல்களும் மேலே விண்மீன்களும் இல்லையா?
உலகம் என்னிடமிருந்து தோன்ற வேண்டும்
என் இதயத்தில் அது வேரூன்ற வேண்டும்.
என் இரத்தத்தில் அது ஊற்றெடுக்க வேண்டும்
என் ஆன்மாவின் மூச்சில் அது வசிக்க வேண்டும்
நான் நெடுந்தூரம் ஊர்ந்து சென்றேன்
திரும்பினேன் கீழும் மேலும் உலகங்கள்
விண்மீன்களும் கதிரவனும் துள்ளின
மின்னல் வெட்டியது நான் மடிந்தேன்”

இப்படி காதல், வாழ்க்கை இரண்டையும் ஒன்றாக்கிய மார்க்ஸ், அனைத்தையும் சமூக கூறாக்கி தேடிய போது எழுதிய கவிதை இது. சமூக முரண்பாடுகளும், அது உருவாக்கும் மனித அவலங்களும், ஏன், எப்படி தோன்றுகின்றன என்ற மார்க்சின் தேடுதல்தான், முரணற்ற சமூக விஞ்ஞானமான மார்க்சியமானது.

**"நம்முடைய முந்தைய தலைமுறை தத்துவ ஞானிகள் உலகத்தைப் பற்றி வியாக்கியாணம் செய்தார்கள். ஆனால், தத்துவஞானிகளின் உண்மையான வேலை உலகை மாற்றுவது தான்."**

சமூகம் பற்றி சொந்த அறிவை தனிமனித நலனுக்கு கீழ்ப்படுத்தாது, அறிவை சமூகத்துக்காக அர்ப்பணித்தவர் கார்ல் மார்க்ஸ். இதன் மூலம் தனிவுடமை சமூகத்துக்கே சவால் விடுத்தார். கார்ல் மார்க்ஸ் வார்த்தையில் இதை கூறினால் ”நம்முடைய முந்தைய தலைமுறை தத்துவ ஞானிகள் உலகத்தைப் பற்றி வியாக்கியாணம் செய்தார்கள். ஆனால், தத்துவஞானிகளின் உண்மையான வேலை உலகை மாற்றுவது தான்.” என்றார். தத்துவமும் சரி, மனித அறிவும் சரி, சமூகத்தை மாற்றுவதற்கு தான். இதை விடுத்து தான் போராடாது, மற்றவன் போராடுவதற்கல்ல தத்துவம். இந்த வகையில் மார்க்சியம் சமூக விஞ்ஞானமாக இருக்கின்றது.

இயற்கையுடனான மனித உறவும், மனிதனுடனான மனித உறவுகளும் வர்க்க அமைப்பில் வர்க்கம் சார்பானது. உழைப்புக்கு ஆதாரமான விஞ்ஞானம், வர்க்க அமைப்பில் வர்க்க சார்பானது. மனித அறிவு வர்க்கம் சார்ந்து, தனிவுடைமைஞு சமூகத்தில் இயங்குகின்றது.

இன்றைய இந்த தனிவுடைமையிலான வர்க்க அமைப்பு உருவாக முன்பு அனைத்து மனிதனும், தனது வாழ்வுடனான போராட்டத்தில் இணைந்து பாடவும், ஆடவும், உழைக்கவும், பொருளைக் கண்டறியவும், கருத்துக் கூறவும் கூட்டிய, ஒரு கூட்டுவாழ்க்கை முறையை கொண்ட மனிதனாகவே மனிதன் வாழ்ந்தான். சமூகத்தின் ஒரு உறுப்பாகவும், அனைத்தையும் கண்டறியும் சமூக விஞ்ஞானியாகவும் மனிதன் இருந்தான்.

அனைவரும் உழைத்து வாழ்பவராக, சமூக உறுப்பாகவும் இருந்தனர். மார்க்ஸ் கூறியது போல் ”உழைப்பைச் சாபக்கேடாகவும் ஓய்வைச் சுதந்திரமாகவும் உணர்தல் மனிதத் தன்மையல்ல.” என்பதே, அன்றைய மனிதனின் கூட்டுவாழ்க்கை முறையின் அடிப்படை. வாழ்விற்கான உழைப்பில் இருந்து பிரியாத மனிதனின் அறிவு, மனிதனுக்கு மனிதன் எதிராக இருந்ததில்லை. மனித அறிவு சமூகம் சார்ந்ததாக இருந்ததே ஒழிய, இன்று போல் தனிமனித நோக்கு சார்ந்ததாக இருக்கவில்லை.

மனிதன் தன்னைச் சுற்றிய பொருளை இனங்காணவும், பொருளைக் கூட்டாக பயன்படுத்தவும் தெரிந்து கொண்ட போது, அது சமூக விஞ்ஞானமாகியது. உதாரணமாக மனிதனின் ஆரம்ப பயன்பாட்டில் ஒன்றான தடியை எடுத்தால், தடியை வளைக்க, ஊன்றுகோலாக பயன்படுத்த, எதிரியை தாக்க, தோண்ட, உணவைப் பிடிக்க, பொருளைப் புரட்ட, தங்குமிடத்தை அமைக்க, பாரங்களைத் தூக்க, நீரோட்டத்தை எதிர்த்துச் செல்ல...., தடி சார்ந்து உருவான மனித கூட்டு உழைப்பு உருவாக்கிய அறிவு சமூக விஞ்ஞானமாகியது. இதேபோல் கல்லை எடுத்தால், தாக்க, கீற, வெட்ட, அரைக்க, அரண் அமைக்க, இறைச்சியை வாட்ட .., கல்லு சார்ந்த உழைப்பு உருவாக்கிய அறிவு சமூக விஞ்ஞானமானது. பொருள் சார்ந்த மனித அறிவு விஞ்ஞானமானது. பொருள் பற்றிய அறிவு விஞ்ஞானமாக, அதற்கிடையிலான மனித உறவுகள் தொடர்பான அறிவும் இணைந்த போது அது சமூக விஞ்ஞானமானது. கூட்டுவாழ்வின் அடிப்படையாக, கூட்டுழைப்பு இருந்தது. இது மனித உறவுகளை உருவாக்கியது.

மார்க்ஸ் கூறியது போல் “யற்கையை மாற்றியமைத்த போதே நீயும் மாற்றியமைக்கப்பட்டாய்” ஆம், அனைத்தும் மாறத்தொடங்கியது. மனித உறவுகள் மாறத்தொடங்கியது. உழைப்பிலான அறிவு வளர வளர, உழைப்பு வடிவங்கள் மாறின. இதனால் நுகர்வின் அளவும், தன்மையும், பொருளும் ... கூட வேறுபடத் தொடங்கியது.

மார்க்ஸ் கூறியது போல்
“இயற்கையுடனான உனது உறவு மாறியபோது
சக மனிதனுடனான உனது உறவும் மாறியதே.
உன் உடலின் மீதே உரிமையின்றி அந்நியப்படுத்தப்பட்டபோது
நீ அடிமை
நிலத்திலிருந்து அந்நியப்பட்டபோது பண்ணையடிமை.
இப்போது உன் உழைப்பிலிருந்தே
அந்நியப்படுத்தப்பட்டிருக்கிறாய், நீ பாட்டாளி□

என்றார். உழைப்பு சார்ந்து வரலாற்று

தொடர்ச்சி 15ம் பக்கம்

தொடரும்

# ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களோடு இணைவோம்!

அது ஒரு உல்லாசப் பயணிகள் நாடி வரும் அழகிய கடற்கரை. இரு உல்லாசப் பயணிகள் அன்று அங்கே தற்செயலாய் சந்தித்துக் கொண்டார்கள். ஒருவர் நோர்வேஜியர் மற்றவர் ஆங்கிலேயர். நோர்வேஜியருக்கு நீண்டகாலமாக இருந்த ஆசைகளிலொன்று, தான் இந்திய பெருநாட்டை ஒருமுறையாவது சுற்றிப் பார்த்துவிடுவதென்ற சிறுவயதிலிருந்தே வளர்ந்து விட்டிருந்த பெருவிருப்பு. நிறையவே இந்தியாவைப் பற்றி தான் கேள்விப்பட்டவற்றை தரிசிக்க வேண்மென்ற ஆவல் அவருக்கிருந்தது. தனது இளவயதில் தனது வருமானத்திற்கு கட்டுப்படியாகாதிருந்தும் தனது இந்தக் கனவை நிறைவேற்றும் எண்ணத்துடன், தான் சிறிதுசிறிதாக சேமித்து வைத்திருந்த பணத்துடன் தனது காதலியுடன் அவர் இந்தியப் பயணம் மேற்கொண்டிருந்தார். இந்தக் கடற்கரைக்கு அன்று அவர் வருகிறார். அங்கே தற்செயலாய் இன்னுமொர்ரு உல்லாசப் பிரயாணியான ஆங்கிலேயரை சந்தித்து அளவளாவி இருவரும் காற்றுவாங்கி விட்டு திரும்பவும் கடற்கரையிலிருந்து திரும்பி அவரவர் விடுதிகளுக்கு செல்வதற்காய் முன்னும் பின்னுமாய் புறப்படுகின்றனர். முன்னதாகப் புறப்பட்ட நோர்வேஜியர் மணற்பரப்பில் கால்கள் புதைய நடந்து கொண்டிருக்கின்ற போது அவரது கவனத்தை ஈர்க்கின்றன ஒரு பெண் சிறுமியும் அதன் மடியில் இருக்கும் இன்னொரு பெண்குழந்தையும். பிச்சையெடுக்கும் அழகான பெண் சிறுமி அதன் மடியில் ஒரு சிறு குழந்தை. சிறுமியின் உடம்பில் கிழிந்துபோன பொத்தல் பொத்தலான அழுக்கேறிய உடை. மடியில் படுத்திருந்த மற்றக் குழந்தையோ பால்குடிக் குழந்தை. அதுவும் கந்தல் உடையுடன் இருந்தது. பிச்சை எடுக்கிறார்கள். பசி அவர்களை இந்தக் கடற்கரையில் தள்ளியிருக்கிறது. தாய் தந்தையின்றி ஆதரவற்று அநாதரவான குழந்தைகள். என்ன கொடூரம்.! பச்சிளம் குழந்தைகள் போவோர் வருவோர் கண்களின் கவனத்தில் இரக்கத்தையும் ஈர்ப்பையும் வரவழைத்துக் கொண்டிருந்தார்கள். பசிக் கொடுமையில் குழந்தைகள் கையேந்தி நிற்கின்ற காட்சிகளை இந்தச் சுற்றுலாவில் பல இடங்களில் அந்த நோர்வேஜியர் கண்ணுற்றிருந்தாலும் இந்தக் குழந்தைகளில் வயதான குழந்தையின் வசீகரமான முகம் ஏனோ அவரைச் சுண்டியிழுத்தது. தாண்டிச் சென்றுகொண்டிருந்தவர் திரும்பி அந்தக் குழந்தையிடம் வருகிறார்.

அந்தக் குழந்தையின் முகத்தில் ஒரு மகிழ்வான மலர்ச்சியான புன்னகையொன்றை மட்டும் கண்டுகொண்டால் போதும் என்று நினைத்தவராய் சில்லறைகளை தவிர்த்து தனது பையிலிருந்து பண நோட்டை அந்தப் பெண் குழந்தையிடம் கொடுக்கின்றார். ஆச்சரியத்திலும் ஆச்சரியமாய் அந்தப் பெண்குழந்தை நீட்டிய நோட்டை அலட்சியமாய் வாங்க மறுக்கின்றது. அந்தப் பெண்குழந்தையிடம் வேறு சில்லைறையோ நோட்டோ எதுவும் பெரிதாக இருப்பதாகத் தெரியவில்லை. கொடுத்த நோட்டு போதாது போலிருக்கிறது என்று நினைத்து இன்னொரு நோட்டை சேர்த்து நீட்டுகிறார். அந்த நோட்டுக்களையும் அந்தப் பெண் குழந்தை வாங்க மறுக்கிறது. இது என்ன விசித்திரம்.

நோர்வேஜியர் தனது நேரத்தையும் மறந்து தான் கொடுத்த நோட்டுக்களை ஏன் அந்தச் சிறு பெண் வாங்க மறுக்கிறாள் என்பதை மொழித் தடையையும் மீறி துருவித் துருவி விசாரிக்கிறார். தனக்கு சில்லறையோ அல்லது நோட்டோ பணமோ தேவையில்லை. தன்னுடைய மடியில் கிடக்கும் குழந்தையின் பசியை உடனே போக்குவதற்கு பருகுவதற்கு ஒன்றிரண்டு பால் பெட்டி வாங்கித் தந்தால் போதும் என்று புரிய வைக்கின்றாள் அந்தச் சிறுபெண். அப்படியே அருகிலுள்ள ஒரு சிறுகடையொன்றைச் சுட்டி கைகளைக் காட்டுகிறாள்.

இதோ வாங்கி வருகிறேன் என்று அவர் அந்த அருகிலுள்ள கடையை நோக்கிச் சென்று பால் பெட்டி வாங்கி வருகின்றார். அந்தச் சிறுமியிடம் கொடுத்து பின்னால் "ஏன் உனக்கு எதுவும் தேவையில்லையா" உனக்கு ஒரு நல்ல உடுப்பு வேண்டுமல்லாவா என கேட்கிறார். சிறுமியோ தனக்கு எதுவும் தேவையில்லை என மறுத்துவிடுகிறாள். சரி என்றுவிட்டு அவர் மீண்டும் தனது விடுதிக்குச் செல்வதற்காய் நடை போடுகிறார். அப்போது மீண்டும் அவர் முன்னர் சந்தித்துக் கொண்ட ஆங்கிலேயர் அவரது வழியில் தென்படவே பேச்சை தொடர்கின்றனர். பேச்சுவாக்கில் தான் ஒரு பிச்சையெடுக்கும் ஒரு சிறுமிக்கு உதவி செய்ததைப் பற்றி பெருமிதப்பட்டுப் பேசுகிறார். நடந்தவற்றை விபரிக்கிறார்.

அந்த ஆங்கிலேயரோ ஒன்றுமே கூறாமல் உனக்கு சற்று நேரமிருக்கிறதா அவசரமில்லைத்தானே என்று கூறி தன்னுடன் மீண்டும் அந்தப் பிச்சையெடுக்கும் குழந்தைகள் இருக்குமிடம் வரும்படி திரும்பி விறுவிறென நடக்கிறார். "நான் பெருமிதப்பட்டுப் பேசியது அவரையும் அக்குழந்தைகளுக்கு உதவவேண்டுமென்று தூண்டியிருக்க வேண்டும்" என நினைத்தவராய் அவரோடு மீண்டும் செல்கிறார் நோர்வேஜியர்.

ஆங்கிலேயர் தற்போது நோர்வேஜியருடன் முன்னர் சொன்ன பால் விற்கும் கடைக்கு நேரேயே செல்கிறார். "பால் பெட்டியை வாங்கிக் கொண்டு செல்லப் போகிறார் போல" பின் தொடர்ந்தார் நோர்வேஜியர்.

எதற்கெடுத்தாலும் போட்டி, இரக்கப்படுவதிலும் போட்டியோ என எண்ணியவாறு கடைக்குள் மீண்டும் ஆங்கிலேயருடன் நுழைகிறார். ஓதுக்கமாக இருவரும் தள்ளியே நிற்கின்றனர். இப்போது ஆங்கிலேயர் ஒரு பரிதாபப் பார்வையோடு புன்னகை ஒன்றை உதிர்த்தவாறு "கண்டுகொள் நேரில்" என்கின்றார் நோர்வேஜியரை நோக்கி.

நோர்வேஜியர் கண்டார். வியந்தார். அப்படி எதைத்தான்



கண்டார் என்கின்றீர்களா? விற்கின்ற பொருட்களுக்கு விளம்பரம் செய்வது என்பது தெரிந்தது தான். ஆனால் இப்படி ஒரு 'விளம்பரமா" "திரைமறைவு" நடவடிக்கையின் திரை விலகுகிறது அவர் கண்முன்னால். இன்னொரு மனிதப் பிறப்பின் மனித அவலத்தையே தன்னுடைய சுய இலாப விளைச்சலாக்குவதற்கும் தனக்கு விளம்பரம் ஆக்குவதற்கும் எப்படி மனம் வருகிறது? மற்றவன் அவலத்தில் பிழைப்பு நடாத்தும் மனிதர்கள் எங்கும் உண்டு. என் நாட்டிலும் உண்டு. ஆனாலும் அவலத்தையே இலாபமாக்கும் நேரடியான தந்திரத்தை தன் கண்முன்னே அவர் தரிசித்த போது அவரது பயணம் உண்மையில் பிரயோசனமாக இருந்ததாகவே அவர் உணர்ந்தார்.

> **"இன்னொரு மனிதப் பிறப்பின் மனித அவலத்தையே தன்னுடைய சுய இலாப விளைச்சலாக்குவதற்கும் தனக்கு விளம்பரம் ஆக்குவதற்கும் எப்படி மனம் வருகிறது?"**

அவர் கண்டது எந்தச் சிறுமிக்கு அவர் பாற்பெட்டி வாங்கிக் கொடுத்தாரோ அந்தச் சிறுமி அதே பாற்பெட்டியை கடைக்காரனிடம் திருப்பி வழங்கியதையும் அந்தப் பாற்பெட்டியைக் கடைக்காரன் மீண்டும் குளிர்சாதனப் பெட்டியில் திரும்பவும் வைத்ததையும் தான். முதல் இல்லாத வியாபாரம். இதற்கு யார் யாரோ பிச்சைக்காரர்களின் அவலம் மூலதனமாகின்றது. மனிதவுணர்வும் இரக்கமுடையவர்களும் ஏமாளிகளாகிறார்கள்.

சரி இப்போ இந்தப் பின்னணியில் இன்னுமொரு விடயத்துக்கு வருவோம்.

சீமான் நாம் தமிழர் கட்சியின் தலைவர், பேச்சாளர். ஐரோப்பிய நாடெங்கும் தனது இனவாத இனத்துவேச சொற்பொழிவுகளை கடந்த மாதத்தில் பல ஐரோப்பிய நகரங்களில் நிகழ்த்தினார். சிங்களவன் இழியவன் தமிழன் பெரியவன் பெருமைக்குரிய இனம் என்ற இனர்வுணர்ச்சிப் பேச்சுகளைச் செவிமடுத்தால் விடுதலை இயக்கங்கள் தோற்றம் பெற முற்பட்ட காலத்துக்கு தமிழரசுக் கட்சியின் அந்நாளைய அதே பாராளுமன்ற வாடை அடிக்கும். அதே ரெக்கார்ட்டை திருப்பிக் கேட்ட மாதிரியே இருக்கும். புலிகளின் தலைவரையும் அருண்மொழிச் சோழனையும் கங்கை வென்று கடாரம் கொண்ட மன்னர் பரம்பரைகளின் வீரதீரங்களையும் கூறி நாம் ஆண்ட பரம்பரை ஆளப் பிறந்த இனம், ஆனால் நிலம் இல்லை. அதற்கு இலங்கையிலே தமிழீழம் தோண்டியெடுக்கப்பட வேண்டும். அதன் மூலம் உலகத் தமிழருக்கு ஒரு நாடு உதித்திட வேண்டும் என்பது தமிழரின் தாகம் என்பதே அவரது பேச்சின் சுருக்கம். புலிக் கொடியேற்றி நடாத்தப்பட்ட இந்த நிகழ்வுகளுக்கு வந்திருந்த புலம்பெயர் தமிழர்கள் மண்டபம் நிறைந்து திரண்டிருந்தார்கள். சீமான் பிரபாகரனை தமிழ்நில மன்னர்கள் வரிசையில் வைத்து தனது பேச்சில் தூக்கி நிறுத்திக் கொண்டேயிருந்தார். மண்டபத்தில் கரவொலி அவ்வாறு அவர் பேசும் போதெல்லாம் கிளம்பிய வண்ணமேயிருந்தது. இலங்கைப் பேரினவாதத்திற்கு எதிராக அதற்கு நிகராகவே தமிழ் இனவாதத்தை அவர் அள்ளி வீசினார். கரகோசம் கிடைத்தது. இன மான உணர்ச்சிகள் மட்டுமே அங்கே தூண்டப்பட்டுக் கொண்டிருந்தன.

இதற்கு மறுபுறத்தில் அதே ஐரோப்பிய நகரங்கள் சிலவற்றில சீமானின் கூட்டங்கள் நடாத்தப்பட்ட ஓரிரு நாட்கள் இடைவெளியில் சமவுரிமை இயக்கம் தனது அங்குரார்ப்பணக் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது. இத்தாலி, டென்மார்க், நோர்வே நாடுகளில் இந்த அங்குராப்பணக் கூட்டங்களை ஒழுங்கு செய்து நடாத்திய வேளையிலேயே சீமானின் கூட்டங்களும் நடாத்தப்பட்டன.

சீமான் சிந்திய இனவாதப் பேச்சுக்களின் உச்சங்கள்:

"நமக்கு துரோகிகளை எதிரிகளை விட சோம்பேறிகள் மிக ஆபத்தானவர்கள். வியாக்கியானம் பேசுகிறவன் வெட்டிப்பேச்சுப் பேசுகிறவன் விதண்டாவாதம் பேசுகின்றவனை முதலில் ஒழிக்க வேண்டும். இதெல்லாம் ஆகிறதா? இதெல்லாம் நடக்கிறதா நீங்கள் எல்லாம் போராடி விடுதலை வாங்கி விடுவீர்களா இதெல்லாம் ஆகக்கூடியதா இப்படி எவன் பேசுகிறானோ அவனைத் தான் நாம் முதலில் காலி பண்ண வேண்டும். இந்தப் பதர்களை முதலில் நாம் விரட்டியடிக்க வேண்டியிருக்கிறது. அதை நீங்க புரிஞ்சுக்கணும்."

"எத்தனை சிங்களன் இன்று புலம்பெயர்ந்திருக்கின்றான்?"

"இலங்கை ஒரேநாடு அதற்குள்ளே அரசியற்தீர்வு என்பவர்களே எங்களுக்கு முன்னே வாருங்கள்? இலங்கை ஒரேநாடாக இருக்கவேண்டும் என்பதற்கு ஒரேயொரு காரணம் சொல்லுங்கள்.இலங்கை இரண்டு நாடாகப் பிளக்கவேண்டும் என்பதற்கு ஓராயிரம் காரணத்தை நாங்கள் சொல்லுகிறோம்."

"ஒரே வழி அரசியற் புரட்சி. என்னைக் கொன்று ஒழித்தாலே ஒழிய, நான் வென்று எடுப்பதை எந்தக் கொம்பனாலும் தடுக்க இயலாது."

தொடர்ச்சி 15ம் பக்கம்

# கொலன்னாவை குப்பைமேடு – நாட்டின் வெட்கக் கேடு!

## வல்லானின் குப்பைகள் வறியவனின் தோட்டத்தில்



> “முன்னூற்று அறுபத்து ஐந்து நாட்களும் நாற்றத்தை பொறுத்துக் கொண்டிருந்த மக்கள், பொறுத்தது பே-ாதும் என்று பொங்கி எழுந்தார்கள்.”

புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் களைகட்டிக் கொண்டிருந்தன. ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசமின்றி எல்லோரும் அதற்குத் தயாராகிக் கொண்டிருந்தார்கள். கடைவீதிகள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தன. எந்தவகையிலாவது உழைத்த பணத்தைக் கொண்டு துணிமணிகள் வாங்குவதற்காக மக்கள் கடைவீதிகளில் நடமாடிக் கொண்டிருந்தார்கள். அதேநேரம் கொலன்னாவ பகுதியில் சம்பவமொன்று நடந்து கொண்டிருந்தது. கொலன்னாவையையும், அதனை அண்டிய பகுதிகளையும் நாறடித்துக் கொண்டிருந்த குப்பைமேட்டுக்கு போகும் வழியை மறித்து அப்பிரதேச மக்கள், அங்கே குப்பை கொட்டுவதற்கு எதிராக சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இறங்கியிருந்தார்கள்.

முன்னூற்று அறுபத்து ஐந்து நாட்களும் நாற்றத்தை பொறுத்துக் கொண்டிருந்த மக்கள், பொறுத்தது போதும் என்று பொங்கி எழுந்தார்கள். அவர்களது போராட்டம் நியாயமானதுதான். அவர்களது கோரிக்கையும் நியாயமானதுதான். தொடர்ந்தும் அவ்விடத்தில் குப்பை கொட்ட வேண்டாமென அரசாங்கத்தை வற்புறுத்துவதற்காகவே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

கொழும்பு மாநகர சபை உள்ளிட்ட பல்வேறு நகர சபைகளினால் கொண்டுவரப்படும் சுமார் 800 தொன் குப்பை கொலன்னாவ, மீதொட்டமுல்ல குப்பைமேட்டில் கொட்டப்படுகிறது. கொலன்னாவ மக்கள் அதற்கு எதிராக 20 வருடகாலமாக குரலெழுப்பிக் கொண்டுதான் இருந்தார்கள். அதற்கு தீர்வு கிடைக்காத நிலையில்தான் கடந்த 6ம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு, அதனைத் தொடர்ந்து சத்தியாக்கிரகத்திலும் ஈடுபட்டனர். இதற்கிடையில் ஏப்ரல் 9ம் திகதி சத்தியாக்கிரகம் நடைபெற்ற இடத்திற்குள் அத்துமீறி நுழைந்த 500 போலிசார் ஊர் மக்களை ஓட ஓட விரட்டியடித்தனர். அவர்களில் 5 பேர் கைது செய்யப்பட்டார்கள். இந்த இடத்தில் குப்பை கொட்டுவதற்கு எதிராக பிரதேசமக்களால் கொழும்பு மாநகரசபைக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறது. தவிரவும் FC FR 218/2009 இலக்கத்தின் கீழ் தொடுக்கப்பட்ட வழக்கில், 2 ஏக்கர் வட்டத்திற்குள் மாத்திரம் குப்பை கொட்ட அனுமதி வழங்கி 2009 ஏப்ரல் மாதம் 27ம் திகதி உயர் நீதிமன்றம் கட்டளையொன்று பிறப்பிக்கிறது.

ஆனால், கொழும்பு மாநகரசபையும், கொலன்னாவ நகரசபையும் அந்த நீதிமன்றக் கட்டளையை மதிக்காமல் 17 ஏக்கர் நிலத்திலும் தொடர்ந்து குப்பை கொட்டி வருகின்றன. 2009 நீதிமன்ற தீர்ப்பை நடைமுறைபடுத்தும்படியே மக்கள் கேட்கிறார்கள். இந்தப் பிரச்சினையில் மீதொட்டமுல்ல பகுதியைத் தவிர, பக்கத்திலுள்ள 5 கிராமங்களின் மக்கள் இதனால் பெரும் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். தஹம்புர, பன்சலஹேன, குருனியாவத்த, அவிசாவலை பாதை 101 தோட்டம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள். இதற்கு 8 மாதங்களுக்கு முன்னர் குப்பைமேட்டிற்கு அருகிலுள்ள 160 வீடுகளை வலுக்கட்டாயமாக உடைத்து அங்கிருந்த மக்களை வெளியேற்றுவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருந்தது.

அன்று அங்கிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் பட்ட துன்பங்கள் சொல்லுந்தரமன்று. அன்று வெளியேற்றப்பட்ட ஒரு பெண்மணி “ஜனரல” என்ற பத்திரிகைக்கு அளித்த தகவலில் இவ்வாறு கூறியிருந்தார்.

“ இதோ பாருங்கள் இங்கே கிராம உத்தியோகத்தர் இருக்கிறார். இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் இருக்கிறது. இராணுவம் இருக்கிறது. பொலிஸ் இருக்கிறது. எங்களுக்கு நடக்கும் அநியாயம் இவர்கள் யாருக்கும் தெரிவதில்லை. மக்களை குடியேற்றிவிட்டு உறுதிப்பத்திரம் தருவதாக கூறிக்கூறி வாக்குகளை பெற்றுக் கொண்டார்கள். வரியும் அறவிட்டார்கள். சரியாக இருந்தால் அவர்கள் குப்பைமேட்டை அகற்றியிருக்க வேண்டும் கொழும்பு மாநகரை அழகுபடுத்துவதாகக் கூறி பிச்சைக்காரர்களை படுகொலை செய்த அரசாங்கம் இது. இப்படியெல்லாம் செய்து வறுமையை ஒழிக்க முடியுமா? நகர அபிவிருத்தி அதிகாரத்தை அவர் கையிலெடுத்தது இதற்காகவா?” (ஜனரல- 2012.10.28)

அங்கிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் இன்றுவரை நிரந்தர வசிப்பிடமில்லாமல் இடத்துக்கிடம் தங்கி வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். 6 மாதத்திற்குள் அவர்களுக்கு நிரந்தரவீடு கட்டித் தருவதாக உறுதியளித்து, அதுவரை வீட்டுக்கூலி என்ற வகையில் 60,000 ரூபா கொடுக்கப்பட்டிருந்தது. என்றாலும் அதற்கு நிரந்தரத் தீர்வொன்றைப் பெற்றுக்கொடுக்க நகரசபையோ, வீடமைப்பு அதிகாரசபையோ, நகர்ப்புர அபிவிருத்தி அதிகாரசபையோ இதுவரை எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. குப்பைமேடு காரணமாக கழிவுகளோடு கிருமிகளும் பாடசாலை கட்டடத்திற்குள் வந்ததால். மீதொட்டமுல்ல ராஹுல வித்தியாலயம் மூடப்பட்டது. குப்பைகளின் துர்நாற்றம் காரணமாக பாடசாலை மாணவர்கள் அடிக்கடி மயக்கமடைவதாகவும், நோய்வாய்ப்படுவதாகவும் மேற்படி பாடசாலையின் ஆசிரியர்கள் கூறுகின்றனர். மூடப்பட்ட ராஹுல வித்தியாலயத்தில் கல்விபயின்ற மாணவர்கள் வேறு பாடசாலைகளில் அனுமதித்துள்ள போதிலும், அவர்கள் வாழும் பிரதேசத்தில் அமைந்துள்ள குப்பைமேடு காரணமாக அந்தப் பாடசாலையிலும் அவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டு மனரீதியில் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். அந்த கிராமங்களைச் சேர்ந்த அனைத்து மக்களும் பல்வேறு நோய்த்தாக்கங்களிற்கு ஆளாக்கப்பட்டு வருகிறார்கள். தொற்றுநோய்கள், சருமநோய், சுவாசநோய் போன்றவை அங்கு பரவலாகக் காணப்படுகின்றன. தஹம்புர என்ற பகுதியில் மாத்திரம் டெங்கு நோயினால் இதுவரை 20 பேர் இறந்துள்ளனர். சிலர் புற்றுநோயாலும் மடிந்திருப்பதாக பிரதேச மக்கள் கூறுகிறார்கள். நாட்டின் ஏனைய பிரதேசங்களில் காணப்படாத குழந்தைகள் மத்தியிலான புற்றுநோய் தாக்கமும் இங்கு காணப்படுகிறது. தவிரவும், விஷக்கிருமிகள் உடலுக்குள் நுழைந்தமையால் குடும்பஸ்தர்களும் மடிந்துள்ளனர்.

தாம் எதிர்கொண்டுள்ள இந்த அநியாயத்திற்கு தீர்வை பெற்றுத் தரும்படி கொலன்னாவ பிரதேச மக்கள் அரசாங்கத்திடம் கேட்கிறார்கள். ஆனால், புத்தாண்டு பிறப்பதற்கு முன்பாகவே அவர்களுக்கு அரசாங்கம் வழமையான பரிசைக் கொடுத்திருக்கிறது. அதுதான் பொலிசாரின் மனிதாபிமானமற்ற தாக்குதல். அந்தத் தாக்குதலால் அரசாங்கம் வென்றது. மீதொட்டமுல்ல மக்களில் சிலர் கைது செய்யப்பட்டார்கள். மேலும் சிலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள். வெற்றிபெற்ற அரசாங்கம் மீதொட்டமுல்லையில் மீண்டும் குப்பை கொட்டத் துவங்கியுள்ளது. நன்றாக அடிவாங்கிய மீதொட்டமுல்ல மக்கள் நிர்க்கதியாக்கப்பட்டுள்ளனர். என்றாலும் சுற்றுவட்டாரத்தில் வீசும் நாற்றத்தோடு அவர்களது தொலைபேசிக்கு புத்தாண்டு வாழ்த்துக்கள் கிடைத்தன. அதி மேதகு ஜனாதிபதியிடமிருந்து. அதில், “உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்”. என்றிருந்தது.



# மே தினத்தில் வர்க்கத்தை ஆழமான கருத்தாடலுக்கு இட்டுச் செல்வோம்



**தோழர் சமீர கொஸ்வத்த**

இன்று நினைவு கூறப்படும் மே தினம் அதன் உண்மையான அர்த்தத்தோடு நினைவு கூறப்படுவதில்லை. அது ஒரு போலியாக மாற்றப்பட்டுள்ளது. இன்றைய நிலையில், முதலாளித்துவ வர்க்கமும், தொழிலாளர் வர்க்கமும் தனித்தனியாக மே தினத்தை நினைவு கூறுகின்றன. அதேபோல், முதலாளித்துவ வர்க்கமும், தொழிலாளர் வர்க்கமும் ஒன்றாக இணைந்து மே தினத்தைக் கொண்டாட முடியுமென்றும் சில செஞ்சட்டை மேதாவிகளும் கூறுகின்றனர். இந்த போலி தர்க்கங்களுக்குப் பதிலாக முதலாளித்துவத்திற்கு எதிராக ஒன்று சேர்ந்து போராடும் அரசியலை சமூகமயப்படுத்த வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

முன்னிலை சோஷலிஸக் கட்சி என்ற வகையில் இம்முறை சர்வதேச தொழிலாளர் தின கோஷமாக " சமவுடைமை வாழ்க்கை" என்பதன் ஊடாக சமூகத்தில் நீங்கள் தோற்றுவிக்கப்போகும் அரசியல் கருத்தாக்கம் எத்தகையது?

நவ தாராளமய முதலாளித்துவ சமூக முறை எங்களுக்கு உரிமையாக்கித்தந்துள்ள வாழ்கை முறைக்குப் பதிலாக, மனித சமூகத்திற்கு சிறந்ததொரு வாழ்க்கை முறையை பெற்றுக் கொள்ளக் கூடியவாறாக சமூகத்தை வழி நடத்துவதாகும். ஆகவே, "சமவுடைமை வாழ்க்கை " என்ற கருத்தாக்கத்தின் மூலம் தற்போதைய வருத்தும் முதலாளித்துவ சமூகமுறை எங்களுக்கு உரிமையாக்கித் தந்திருக்கும் வாழ்க்கை முறையையும், அது, மனித நேயத்திற்கு எதிராக வஞ்சனையோடு உருவாக்கி வரும் அனைத்தையும் தூக்கி எறியும் செயற்பாடாகும். மனிதனால் மனித சாரத்தை நெருங்கக் கூடிய வாழ்க்கையொன்றை உரிமையாகும் செயற்பாடாகும். அதுதான் "சமவுடைமை வாழ்க்கை" என்பது.

சர்வதேச தொழிலாளர் தினத்தை, சிறு முதலாளித்துவ மற்றும் முதலாளித்துவ அரசியல் கட்சிகளினதும் பிரச்சாரத்திற்கான தினமாகவும் மற்றும் கலாச்சார விழாவாகவும் ஆக்கப்பட்டிருக்கும் நிலையில், முன்னிலை சோஷலிஸக் கட்சி என்ற வகையில் நீங்கள் எப்படி வேறுபடுகிறீர்கள்?

முக்கியமான விடயம் என்னவென்றால், தொழிலாளர்களின் போராட்டம் ஹேமார்கட் சதுக்கத்தில் நடந்த தொழிலாளர்கள் மீதான கொலைவெறித் தாக்குதலை நினைவு கூறுமுகமாக துவங்கப்பட்ட மே தினம் குறித்து வர்க்கத்திற்கு உணரச் செய்யும் அரசியல் கருத்தாக இருப்பது, வெற்றி கொள்வதற்காக நிறுவனமயப்படுவதற்கும், போராடுவதற்கும் உள்ள தேவையேயாகும். ஆகவே, முதலாளித்துவ முறைக்குள் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும், போராடா வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் வெற்றி கொள்ளவோ, முதலாளித்துவத்தை தோற்கடிக்கவோ முடியாது. எனவே இந்த முதலாளித்துவ முறைக்கு எதிராக ஒருங்கிணைய வேண்டிய கட்டாயத் தேவையை உறுதி செய்ய வேண்டியுள்ளது. அதேபோன்று, வர்க்க உணர்வையும் ஊட்ட வேண்டும். இதுதான் மே தினத்தில் தொடர்ந்து வந்த இடதுசாரி பாரம்பரியம். ஆனால், நவ தாராளமய முதலாளித்தில் உலக மட்டத்திலான இடதுசாரி இயக்கங்களின் சந்தர்ப்பவாதம் மற்றும் காட்டிக் கொடுப்புகள் ஊடாக, கூட்டணி சேருவதற்கான பாதையில் பயணித்து, முதலாளித்துவ வர்க்கத்தோடு இணைந்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் காரணமாகவேதான் சில இடதுசாரி அமைப்புகள் முதலாளித்துவ வர்க்கத்தோடு சேர்ந்து மே தினத்தை நினைவுகூற நடவடிக்கை எடுத்திருந்தன. இறுதியில், தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் தேவைகளை அழித்துவிட்டு போலியான நினைவு கூறலொன்றை உருவாக்குவதற்கு ஏற்ற சந்தர்ப்பமொன்று முதலாளித்துவ கட்சிகள், சிறு முதலாளித்துவ கட்சிகள் அனைத்திற்கும், உருவாகியிருக்கிறது. அதேபோன்று நவ தாராள முதலாளித்துவத்தில் அனைத்தும் முதலாளித்துவ கோட்பாட்டிற்கு ஏற்ப புரிய வைக்கும் செயற்பாடாகவும் இருக்கிறது. ஆகவே, இன்று மே தினம் என்று சொல்வது, உண்மையான அர்த்தத்தோடு உருவாக்கப்பட்ட கருத்தல்ல. அதற்குப் பதிலாக அது போலியாக மாற்றப்பட்டுள்ளது. முதலாளித்துவ வர்க்கமும், மே தினத்தை நினைவு கூறுகிறது, தொழிலாளர் வர்க்கமும் மே தினத்தன்று நினைவு கூறுகிறது. முதலாளித்துவ வர்க்கமும், தொழிலாளர் வர்க்கமும் ஒன்றாகச் சேர்ந்து மே

> **"தொழிலாளர்கள் பே-ாலி மனநிலைக்குள் பலி கொடுக்கப்பட்டுள்ளார்கள். அதனாலேயே தொழிலாளர்கள் குறுகிய தனித்துவங்களுக்குள் கட்டுண்டு, பிரிந்துள்ளார்கள். மறுபக்கத்தில் அரசியல் அறிவு இல்லாதவர்களாகவும் காணப்படுகிறார்கள்."**

தினத்தை நினைவு கூற முடியுமென்றும் சிலர் கூறுகிறார்கள். இந்த போலிக்குப் பதிலாக, முதலாளித்துவ முறைக்கு எதிராக நிறுவனமாக வேண்டுமென்பதிலும், போராடும் அரசியலை சமூகமயமாக்க வேண்டுமென்பதிலும் நாங்கள் அசையாத நம்பிக்கை வைத்துள்ளோம். மேற் குறிப்பிட்ட போலியை வெளிச்சத்திற்கு கொண்டுவருவதன் மூலமாக அந்த நம்பிக்கையை தொழிலாளர் வர்க்கத்தின் மத்தியில் கட்டியெழுப்ப முடியும். ஆகவே நாங்கள் முன்னிலை சோஷலிஸக் கட்சி என்ற வகையில் முந்தைய மற்றும் நடைமுறையிலுள்ள பாரம்பரியங்களுக்கு புறம்பாக மே தினத்தோடு மட்டும் வரையறுக்கப்படாத மாற்று அரசியல் செயற்பாட்டுக்கான தினமாக மே தினத்தை கொண்டு வர முயன்று வருகிறோம்.

இலங்கை தொழிலாளர் வர்க்கம் என்ற வகையில், நிறுவனமாக்கும் நடவடிக்கையில் இறங்கும்போது, இயக்கம் என்ற வகையில், நீங்கள் எதிர்கொள்ளும் சவால் எத்தகையது?

பல்வேறு சவால்கள் இருக்கின்றன. பிரதானமாதுதான், இடதுசாரி இயக்கத்தின் துயரம் நிறைந்த அனுபவங்கள், தடம்புரளல்கள், காட்டிக் கொடுப்புக்கள், சீர்த்திருத்தவாத மற்றும் கூட்டணிவாத குட்டையில் மூழ்குதல். இவை காரணமாக வர்க்கம் நம்பிக்கை இழந்துள்ளது. ஆகவே முதலாளித்துவத்தை கவிழ்த்துவிட முடியும், இதை விடவும் நல்லதொரு சமூக முறையை அமைத்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை வர்க்கத்திற்கு இல்லாமலாகிவிட்டது. அதற்கான முழுப் பொறுப்பும் எங்களை சார்ந்தது. இரண்டாவது விடயம்தான், நவ தாராளமயத்திற்குள் முதலாளித்துவ கோட்பாடு மற்றும் அரச அடக்குமுறை கருவிகளினால் தொழிலாளர்கள் போலி மனநிலைக்குள் பலி கொடுக்கப்பட்டுள்ளார்கள். அதனாலேயே தொழிலாளர்கள் குறுகிய தனித்துவங்களுக்குள் கட்டுண்டு, பிரிந்துள்ளார்கள். மறுபக்கத்தில் அரசியல் அறிவு இல்லாதவர்களாகவும் காணப்படுகிறார்கள். ஆதலால் அவர்களை கூட்டுச் செற்பாடுகளிலும், போராட்டங்களிலும் ஈடுபடச் செய்வது கஷ்டமான காரியமாக இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றியமைக் வேண்டும். இதனால் அமைப்பு ரீதியில் ஒன்று சேர்வதற்கான நம்மபிக்கையையம் வழக்காறுகளையும் அவர்களிடத்தில் உருவாக்க வேண்டும். இன்னொரு விடயம் என்னவென்றால், வரலாற்றில் அநேகமான மக்கள் செயற்பாடுகள், எழுச்சிகள், முறைக்கு மாற்றமாக போராடுவதற்குப் பதிலாக முதலாளித்துவ முறையை தூக்கியெறியக் கூடிய முதலாளித்துவத்திற்கு எதிரான சிந்தனையை வர்க்கத்திற்குள் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. ஆனால் இன்று என்ன நடந்திருக்கிறது. அவை இறுதியில் முதலாளித்துவத்தினால் உறிஞ்சப்படும் போராடடங்களாக மாறியிருக்கின்றன. அவ்வாறு உறிஞ்சிக் கொள்ளும் போராட்டங்களாக மாறுவதற்கு, அவற்றில் சரியானதும் அரசியல் கண்ணோட்டத்துடனுமான அறிவை கொண்டு செல்லும் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு வர்க்கத்தின் புரட்சிகர இயக்கமொன்று ஸ்தாபிக்கப்படாமையே காரணம். ஆகவே வர்க்கத்தை நிறுவனப்படுத்தும்போது வர்க்கத்திற்கு தலைமைத்துவமளிக்கக் கூடிய புரட்சிகர அமைப்பொன்றை உருவாக்குவதே இன்றைய தேவையாக உள்ளது.

தற்போதைய தொழிற் சங்க அமைப்பு தொடர்ப்பிலான அரசியல் படிப்பினை எத்தகையது?

இதனை உலக மட்டத்தில் எடுத்துப் பார்த்தால் துக்ககரமான அனுபவம் என்றுதான் கூற வேண்டியுள்ளது. ஒன்று, நிறுவனமாதல் என்ற விடயம், வர்க்கத்திற்குள் தொழிற்சங்கவாதத்திற்கும், பொருளாதாரவாதத்திற்கும் மட்டுப்பட்டுள்ளது. குறுகிய மறுசீரமைப்பைப் பெற்றுக் கொள்ளுதலலும் பொருளாதார கோஷங்களுக்குள் வர்க்கத்தை மட்டுப்படுத்தலுமேஇதற்குள் இருக்கிறது. அதனால், இங்கே பயனீட்டுவாதமொன்று இருப்பது தெளிவாகவே தெரிகிறது. தொழிற்சங்க அமைப்புகள் முதலாளித்துவ கோட்பாட்டின் ஆயுதமாக வர்க்கத்திற்குள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. வர்க்கத்தை அரசியல் போராட்டங்களுக்கு அழைப்பதற்குப் பதிலாக, தொழிற்சங்க செயற்பாட்டினால் குறுகிய மறுசீரமைப்பிற்குள் நிற்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த நிலையை நாங்கள் முற்றாக நிராகரிக்க வேண்டியுள்ளது. அதேபோன்று இந்த நிலைமைக்கு எதிராக உலக மட்டத்தில் எதிர்விரோதமொன்றை காட்டுவதற்கு, இந்த துரோகத்தை வெளிச்சத்திற்கு கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்ட செயற்பாட்டை வர்க்கத்துடனான செயற்பாட்டாக மாற்ற முடியாத நெருக்கடி இருப்பதை நாங்கள் காண்கிறோம். இந்த நெருக்கடியை தோற்கடித்து அனைத்து தொழிலாளர்களையும் ஓரணியில் திரட்ட வேண்டிய கடமைப் பொறுப்பு புரட்சிகர இயக்கத்திற்கு இருக்கின்றது.

இலங்கை பரட்சியின் சாரமான தொழிாளர்களை வர்க்கமாக நிறுவனப்படுத்தும் புரட்கிகர அமைப்பு என்ற வகையில், உங்களது கண்ணோட்டம் மற்றும் நிறுவனமய தலையீடு எவ்வாறு இருக்க வேண்டும்?

இலங்கையின் புரட்சிவாத தொழிலாளர்கள் உள்ளிட்ட விவசாயிகள், மீனவர்கள், ஒடுக்கப்பட்ட பெண்கள், இளைஞர்கள், மாணவர்கள் உட்பட அனைத்து ஒடுக்கப்பட்ட சக்திகளையும் நிறுவனப்படுத்த வேண்டும். இதற்கான முயற்சி, மேற் குறிப்பிட்ட அரசியலின் கீழ் மிகக் கஷ்டமான காரியமாக இருக்கின்றது. நம்பிக்கை சிதைவடைந்துள்ளது, அவர்களை சரியான அரசியல் வழக்காறுகளுக்குள் அழைத்துச் செல்லக் கூடிய சரியான அரசியல் தலைமையொன்றை வர்க்கத்திற்குள் உறுதி செய்வதில் நாங்கள் தோல்வியடைந்துள்ளோம். இந்த நிலைமையை மாற்றுவதற்காக சமூகத்தில் விரிவான அரசியல் தலையீடொன்று தேவைப்படுகிறது. அவர்கள் இருக்கும் இடத்திலிருந்தே ஆரம்பித்து, சமூகத்தை மாற்றியமைக்கக் கூடிய போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கும் வழக்காறொன்று தேவைப்படுகிறது. அந்த கஷ்டமான காரியத்திற்காக வர்க்கத்தை ஆழமான அரசியல் கருத்தாடலொன்றுக்கு இட்டுச் செல்லக் கூடிய சந்தர்ப்பம் என்ற வகையில்தான சர்வதேச மே தினம் எங்களுக்கு முக்கியமாக இருக்கின்றது. ஆகவே, புரட்சிகர இயக்கம் என்ற வகையில், நாங்கள் தொடங்கவிருக்கும் அரசியல் கருத்தாடல், வர்க்கத்திற்குள் வழக்காறுவரை இட்டுச் செல்லக் வேண்டிய பொறுப்பு, நிறுவன மற்றும் கோட்பாட்டு ரீதியில் எங்கள் மீது இருக்கிறது.

# உளவாளிகள்- காட்டி கொடுக்கும் களவானிகள்






**மட்டகளப்பு நகரில் சமவு-ரிமை இயக்கம் வடக்கு கிழக்கில் இராணுவ ஆட்சியை நிறுத்த வலியுறுத்தி மேற்கொண்ட கவனயீர்ப்பு போராட்டத்தின் அனுபவங்களை பகிர்கிறார் சமவு-ரிமை இயக்கத்தினை சேர்ந்த தோழர் ஹைதர்.**

கடந்த ஜனவரி மாதம் சம உரிமை இயக்கத்தினால் மட்டக்களப்பில் வடக்கு கிழக்கில் இராணுவ ஆட்சியை நிறுத்து என்ற கோசம் அடங்கிய பதாதையில் கையொப்பமிடும் வேலைத்திட்டமொன்றை நடாத்தச் சென்றிருந்தோம். காலை 9.00 மணி இருக்கும் மட்டக்களப்பு பேருந்து நிலையத்தைச் சென்றடைந்ததும் சம உரிமை இயக்கத்தின் ஏனைய தோழர்களும் அங்கு வருகை தந்திருந்தனர். நாங்கள் அனைவரும் ஓரிடத்தில் நிற்பதைக் கண்ட ஒருவர் பேருந்திலிருந்து எங்களை புகைப்படம் எடுத்துக்கொண்டிருப்பதைக் கண்ட நான் மற்ற சகோதரருக்கு யாரோ புகைப்படம் எடுக்கின்றார்கள் என்று சொல்வதற்குள் அவர் பேருந்தின் பின்பக்கமாகச் சென்று விட்டார் பின்னர் நாங்கள் எடுத்துச் சென்ற பதாதையை மட்டக்களப்பு பேருந்து நிலையம் முன்பாக கட்டினோம் கையொப்பம் சேகரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தோம். அந்த வேலையில் நவீன தொழில்நுட்பம் கொண்ட கமராக்களை பயன்படுத்தி பலரும் புகைப்படம் எடுத்துக்கொண்டிருந்தார்கள் அவர்கள் தங்களை ஊடகவியலாளர்கள என்று அறிமுகப்படுத்தினார்கள் ஆனால் ஊடகவியலாளருக்குரிய எந்தவித செயற்பாடுகளும் அவர்களிடம் தெரியவில்லை. அவர்கள் ஆடை அணிந்திருந்த விதம் தொடக்கம் அவர்கள் பேசியது வரை எல்லாமே சந்தேகத்திற்கிடமாகவே இருந்தது. சிலர் இல்லாத இணையத்தளங்களின் பெயர்களைக் கூடச் சொன்னார்கள் எங்களால் அவர்களை ஊகிக்க முடிந்தது அவர்கள் உளவாளிகள் என்பதை

தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுத்தருகிறோம் என்று இறுதியில் முதலாளித்துவ ஆட்சியாளர்களிடம் தங்களது போராட்டங்களை அடகு வைத்த வரலாற்று நிகழ்வுகளையும் நாம் அறிவோம் பின்னர் 2009 ம் ஆண்டு தமிழ் பேசும் மக்கள் கொல்லப்படும்போதும் கூட முதலாளித்துவத்திற்குகுள் புதைந்து வாய்மூடி மௌனித்துக்கொண்டிருந்த தமிழ் மக்களுக்காக போராடுகின்றோம் என்று பொய் கூறித்திரிந்த தமிழ் தலைமைகளையும் நாம் அறிவோம்.

மாறுபட்ட கோணங்களில் சிந்தித்த மாற்றுக் கருத்துடைய போராளிகளை கொன்று குவித்ததும் சாதாரண தமிழ் சிங்கள முஸ்லிம் அப்பாவிப் பொதுமக்களை யுத்தத்தின் பெயரில் கொலை செய்ததையும் அவர்களைக்கடத்தி காணாமல் செய்ததையும் சிறை முகாம்களில் வதை செய்வதையும் நாம் அறிவோம் பிரச்சினை இப்படியெல்லாம் இருக்கையில்

தமிழ் மக்களுக்கான உண்மையான போராட்டம் ஒன்று முன்னெடுக்க அடித்தளம் இடும் சந்தர்ப்பத்தில் இப்படியான உளவாளிகளின் நடவடிக்கை எப்படி அமையும் என்பதை கடந்த வரலாறுகளில் இருந்து எமக்கு கற்றுக்கொள்ள முடியுமாக இருக்கும். எல்.டி.டியில் இருந்த பெரும்பாண்மையானவர்கள் தமிழர்கள் ஆனால் தமிழர்கள் அனைவரும் எல்.டி.டியினர் அல்ல என்ற உண்மையைச்சொல்ல நாம் கடப்பாடுடையவர்களாக இருக்கின்றோம் கடந்த 60 வருடத்திற்கும் மேலாக இலங்கையிலுள்ள தமிழ் முஸ்லிம் சிறுபாண்மையினர் தங்களது உரிமைகளைக் கேட்டு போராடியதில் அதிகமாக அவர்கள் அடைந்த இலாபம் உயர் இழப்புக்களே. இந்த முதலாளித்துவம் சிங்கள மக்களையும் விட்டு வைக்கவில்லை 71 ,89 ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் மாற்றம் வேண்டி போராடிய பல்லாயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளை இந்த முதலாளித்துவம் கொன்று குவித்ததோடு மட்டுமல்லாமல் பலரின் குரல்வளைகளையும் நசுக்கியது ஆகவே, முதலாளித்துவ அரசிற்கு எடுபிடி வேலை பார்க்கும் உளவாளிகள் முதலில் உண்மையை உணர வேண்டும்.கடந்த காலங்களில் வரலாறுகளில் கற்றறிந்த பாடங்களை ஞாபகத்தில் எடுக்க வேண்டும். நாம் துப்புக் கொடுப்பது யாரிடம் யாருக்காக என்ற கேள்வியை ஒவ்வொருவரும் மனதில் எடுக்க வேண்டும். கடந்த காலங்களில் தமிழ் மக்கள் அழிக்கப் படுவதற்கு இந்த உளவாளிகளும் கூடிய பங்கினை செலுத்தியுள்ளார்கள். எனவே கடந்த காலங்களில் அழிவுக்கு வழிவகுத்தவர்களில் எமது பங்கும் உள்ளது என்பதை இந்த உளவாளிகள் ஒவ்வொருவரும் தங்கள் மனச்சாட்சியை கேட்டுக்கொள்ளட்டும்.

மீண்டுமொரு அழிவை சந்திக்க மக்கள் தயாராக இல்லை. எனவே இந்த முதலாளித்துவம் இனம் மதம் மொழி பார்ப்பதில்லை அதனது வேலை ஆட்சியை நடாத்திச் செல்வதற்காக எதை வேண்டுமானாலும் செய்வது அவர்களுக்கு நாட்டு மக்களின் துன்பங்கள் பிரச்சினையாக தெரிவதில்லை. வடக்கு - கிழக்கு மக்களின் வாழ்வுரிமை பிரச்சினையாகத் தெரிவதில்லை. ராணுவ சர்வாதிகாரம் அங்கே காட்டுத் தர்பார் நடத்துவது அவர்களுக்கு பிரச்சினையாகத் தெரிவதில்லை. நாட்டில் இனவாதத்தை தூண்டி அதில் குளிர்காய நினைக்கும் முதலாளித்துவ சர்வாதிகாரம் பிரச்சினையாகத் தெரிவதில்லை. ஆனால் மக்களின் சம உரிமைக்காகப் போராட்டக் களத்தில் குதித்திருக்கும் சம உரிமை இயக்கமும் அதன் செயற்பாட்டாளர்களுமே பிரச்சினையாக தென்படுகிறார்கள் .இந்த உளவாளிகள் ஒன்றை மட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். தங்களை தற்காத்துக் கொள்ள சமூகத்தை காட்டிக் கொடுக்க புறப்பட்டிருக்கும் இவர்கள் ஒருநாள் இதே சமூகத்தால் ஓரங்கட்டப்பட்டு விடுவார்கள் என்பதை உணரவேண்டும். உலகில் பிரபல்யம் வாய்ந்த உளவாளிகள் கூட இந்த முதலாளித்துவ ஆட்சி முறைக்குள் அகப்பட்டு உளவு கொடுத்து மக்களை கொன்ற பின் அவர்கள் மனம் வருந்தியும் சமூகத்திலிருந்து அவர்கள் ஒதுக்கப்பட்டதையும் உணர வேண்டும்.

எனவே தற்போதைய கால கட்டத்தில் நாட்டில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளுக்கு உண்மையான தீர்வைத்தேட வேண்டும் அத்துடன் நின்றுவிடாமல் மக்களுடன் இணைந்ததாக போராட்டங்களையும் மேற்கொள்ள வேண்டும் எந்தவொரு போராட்டமும் மக்கள் மயப்பபடுத்தாத வரை அது வெற்றியளிக்காது என்ற வரலாற்றுப் பாடத்தை மனதில் கொண்டு உண்மையான மக்கள் போராளிகளாக நாம் மாற வேண்டும். இப்போது உங்களை வைத்து தகவல்களை எடுத்து உண்மையான மக்கள் போராளிகளை தடை செய்து கொலை செய்யும் இவர்கள் நாளை இதே நிலைமைக்கு உங்களையும் கொண்டு வருவார்கள் இதனால் வரலாறுகளில் உங்கள் பெயர்களுக்குப் பின்னால் எட்டப்பர்கள் என்ற நாமகரணம் சூட்டப்படும். எனவே மக்கள் போராட்டங்களை மதித்து அதை முன்னெடுத்து நடாத்தி செல்பவர்களுக்கு உதவி செய்வதுடன் நீங்களும் பங்காளிகளாக மாறி அதற்கு உரமூட்ட வேண்டும். நாம் தோல்வியிலிருந்துதான் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது. எனவே காட்டிக்கொடுப்புகளை விட்டு விட்டு மக்கள் மத்தியில் இருந்து சமூக மயப்படுத்தப்பட்ட முதலாளித்துவ அரசுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுக்க நாம் அனைவரும் ஒன்று திரள்வோம்.

# காலாகாலமாக ஏமாற்றப்படும் மலையக தோட்டத் தொழிலாளர்கள்

மலையக தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு சம்பந்தமான கூட்டு உடன்படிக்கை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை முதலாளிமார் சம்மேளனத்திற்கும் சம்பள உயர்வு சம்பந்தமான கூட்டு உடன்படிக்கையில் கையொப்பமிடும் தொழிற்சங்க கூட்டுக்கமிட்டிக்குமிடையில் நடைபெற்று தோட்டத்தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படுவது வழக்கம். இதன்படி சம்பள உயர்வு வழங்கப்படும்போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஆறுமுகம் தொண்டமான், தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வேலாயுதம், ஏனைய தொழிற்சங்க கூட்டுக்கமிட்டி சார்பில் இராமநாதன் ஆகியோர் கையொப்பமிட்டு வருகின்றனர்

கடந்த 2011ம் ஆனடு செய்துகொள்ளப்பட்ட கூட்டு உடன்படிக்கையின்படி சம்பள உயர்வு சம்பந்தமான பேச்சுவார்த்தை முதலாளிமார் சம்ளேனத்திற்கும் தொழிற்சங்க கூட்டமைப்புக்கும் இடையில் சில மாதங்கள் நடைபெற்று கூட்டு உடன்படிக்கையில் கையொப்பமிடப்பட்டு தோட்டத்தொழிலாளர்களுக்கான ஒரு நாள் அடிப்படை சம்பளமாக ரூபா 380 வழங்கப்பட்டது. இக்கூட்டு உடன்படிக்கை 2013 மார்ச் மாதம் 31ம் திகதியுடன் முடிவடைந்ததைத் தொடர்ந்து, 2013 ஏப்ரல் மாதம் முதல் தோட்டத்தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு சம்பந்தமான பேச்சுவார்த்தை தோட்ட முதலாளிமார் சம்மேளனத்திற்கும தோட்ட தொழிற்சங்க கூட்டுக்கமிட்டிக்கும் இடையில் நடைபெற்று, தோட்டத்தொழிலாளர்களுக்கான அன்றாட தேவைகளை சமாளித்து வாழ்க்கையை நடத்திச் செல்வதற்கான சம்பள உயர்வை தாம் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கங்கள் பெற்றுக்கொடுக்கும் என தோட்டத்தொழிலாளர்கள் எதிர்பார்த்தனர்.

2013 மார்ச் மாதம் 31ம் திகதியுடன் கூட்டு உடன்படிக்கை முடிவடைந்ததைத் தொடர்ந்து இன்றைய வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ற சம்பள உயர்வை பெற்றுக்கொடுக்க வேண்டிய கூட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஆறுமுகம் தொண்டமான், ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையின் கீழ் இயங்கும் இலங்கை தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் வேலாயுதம் கூட்டு தொழிற்சங்களின் சார்பாக இராமநாதன் ஆகியோர் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பற்றி சிந்திக்காமல் 2013 ஏப்ரல் முதல் வாரத்தில் தோட்டத்தொழிலாளர்களுடைய சம்பள உடன்படிக்கைகளில் கையொப்பமிட்டு முதலாளிமார் சம்மேளத்தினால் கொடுக்கப்பட்ட அடிப்படை நாட்சம்பளமான ரூபா 380 உடன் ரூபா 70 சேர்த்து ரூபா 450 சம்பள உயர்வை தோட்டத்தொழிலாளர்களுக்கு பெற்றுக்கொடுத்துவிட்டோம் என கூறி வருகின்றனர்.

இந்த சம்பள உயர்வு தோட்டத்தொழிலாளர்களுக்கு போதுமான சம்பள உயர்வு அல்ல. அவர்களுக்கான நாட்சம்பளமாக ரூபா 600 பெற்றுக்கொடுக்கின்றோம் எம்முடன் இணைந்து நாம் எடுக்கும் போராட்டங்களில் கலந்து கொள்ளுங்கள் என சில தொழிற்சங்கங்கள் கூறி வருகின்றன. இவர்களுடைய தொழிற்சங்கப் போராட்டம் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளை பெற்றுக்கொடுப்பதற்காகவோ, அல்லது தோட்டத்தொழிலாளர்களின் அன்றாட வாழ்க்கைச் செலவை சமாளித்துக் கொள்வதற்கான சம்பள உயர்வை பெற்றுக்கொடுப்பதற்காகவோ அல்ல. எதிர்வரும் காலங்களில் தமது தொழிற்சங்கங்களுக்கு ஆள் சேர்ப்பதற்காவே தவிர, தோட்டத்தொழிலாளர்களின் அடிப்படைப் பிரச்சினைகளான தாம் வாழும் வீட்டுப் பிரச்சினை, தோட்டத்தொழிலாளர்களுடைய சுகாதாரப் பிரச்சினை, அவர்களுடைய போக்குவரத்துப் பிரச்சினை சம்பந்தமாகவும், அவர்களுடைய வாழ்க்கைச் செலவை சமாளித்துக்கொள்வதற்கான சம்பள உயர்வை பெற்றுக்கொடுக்கவும் எந்த ஒரு தொழிற்சங்கமோ, அல்லது தொழிற்சங்கக் கூட்டமைப்போ இதுவரை காலமும் கதைக்கவும் இல்லை, சிந்திக்கவும் இல்லை. அது சம்மந்தமாக தெரிந்துகொள்ளவும் இல்லை.

எமது நாட்டின் வளங்களைச் சுருட்டிக்கொண்டு செல்வதற்காக எமது நாட்டைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் எமது நாட்டில் காடுகளை அழித்து, அவற்றில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையை மேற்கொண்டனர். அதன் மூலம் இந்நாட்டு வளங்களை தமது நாட்டுக்கு கொள்ளையிட்டுச் செல்வதற்காக, பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் எமது நாட்டு மக்களை அவர்களுடைய அடிமைகளாக்கி வேலைவாங்க முயற்சி எடுத்தனர். ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டு வேலை செய்ய விரும்பாத எமது நாட்டு மக்கள் தாழ்நில பிரதேசங்களை நோக்கிச் சென்றனர்

இதனால் தோட்டப் பயிர்ச்செய்கைகளில் அடிமைகளாக வேலை செய்வதற்கு வெளிநாடுகளில் இருந்து தொழிலாளர்களை கொண்டு வரவேண்டிய நிலை ஏற்பட்டது. இது சம்பந்தமாக சிந்தித்த ஆங்கிலேயர் இலங்கைக்கு அண்மையிலுள்ள தென்னிந்திய மாநிலத்தில் வறுமைக்கோட்டிற்கும் கீழிருந்த மக்களை பசப்பு வார்த்தைகள் கூறி இலங்கைக்கு அழைத்து வந்தனர். தென்னிந்தியாவில் குறிப்பிட்ட சில பிரதேசங்களில் ஆங்கிலேயர்களால் செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட பஞ்சத்தில் சிக்கி பட்டினியால் செத்துக்கொண்டிருந்த மக்கள் தரகர்கள் மூலமாக இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு தோட்டப்பகுதிகளில் அடிமைகள் போல் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். இங்கு வந்த தொழிலாளர்கள் வாழ்வதற்கான சரியான சுகாதார வசதிகளுடன் கூடிய வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு பதிலாக லயன் காம்பிராக்களை அமைத்துக்கொடுத்தனர். குடும்பம் குடும்பமாக இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட மக்கள் இன்று வரை 10X8 அறைகளிலேயே வாழ்ந்து வருகின்றார்கள். அவ்வாறு லயன்காம்பிராக்களை அமைத்து கொடுத்ததற்கான காரணம் அவர்களை பொழுதுவிடிவதற்கு முன் வேலைக்கு அனுப்புவதற்காகவே. அவர்கள் அமைத்துக்கொடுத்த லயன்காம்பிராக்களிலே இன்றுவரை வாழ்ந்து வருகின்றனர். ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி, குழந்தைகள், தாய் தந்தையர் என அனைவரும ஒரே அறையில் இன்றுவரை வாழ்ந்துவரும் இந்த அவலநிலை எப்போது மாறும் என அவர்கள் எதிர்பார்த் துக்கொண்டிருக்கின்றனர். .

> “ஆனால் எமது நாடு சுதந்திரமடைந்து இன்று பல வருடங்கள் கடந்தும் இன்றுவரை தோட்டத்தொழிலாளர்களின் வீடில்லாப் பிரச்சினை தீர்ந்ததில்லை.”



ஆனால் எமது நாடு சுதந்திரமடைந்து இன்று பல வருடங்கள் கடந்தும் இன்றுவரை தோட்டத்தொழிலாளர்களின் வீடில்லாப் பிரச்சினை தீர்ந்ததில்லை. இன்றுவரை அவர்கள் பல வருடங்களுக்கு முன ஆங்கிலேயரால் கட்டிக்கொடுக்கப்பட்ட லயன்காம்பிராக்களிலே குடும்பத்துடன் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் தேர்தல் காலங்களில் அவர்கள் வாழ்வதற்கு தேவையான வசதிகளை செய்து கொடுப்பதாக போலிவாக்குறுதிகளை வழங்கி அவர்களுடைய வாக்குகளைப் பெற்று மந்திரி பதவிகளையும் அமைச்சுப் பதவிகளையும் பெற்றுக்கொணடு சுகபோக வாழ்க்கையை வாழ்வதற்காக பல அரசியல் கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகளும் அவர்களுடைய கைக்கூலிகளும் அவர்களிடம் சென்று தாங்கள் வாழும் லயன்காம்பிராக்களுக்கு பதிலாக தாங்கள் வாழ்வதற்கு தேவையான சகல வசதிகளும் கொண்ட வீடுகளை அமைத்து தருகின்றோம் என ஏமாற்று வார்த்தைகளை கூறிச் சென்ற அரசியல்வாதிகள் இன்றுவரை தோட்டத்தொழிலாளர்கள் வாழும் லயன் காம்பிராக்களை திருத்தியமைத்து கொடுக்கவும் இல்லை அவர்கள் வாழ்வதற்கு வசதியான வீடுகளை கட்டிக்கொடுத்து அவர்களுடைய வீடில்லாப் பிரச்சினையை தீர்க்கவும் இல்லை. அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும் இல்லை.

# மே தினம் தொழிலாளருக்காகவா? கட்சி ஆதரவாளர்களுக்காகவா?

மே தினத்திற்கு இன்னும் சில நாட்களே இருக்கின்றன. மே தினம் என்பது கட்சி அரசியலுக்கு அப்பால் சென்ற தொழிலாளர்களுக்காக குரல் கொடுக்கும் தினமாகும். சர்வதேச தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காக உரத்துக் குர கொடுக்கும் தினமாகும்.1886 மே மாதம் முதலாம் திகதி அமெரக்காவின் சிகாகோ நகர ஹேமார்ட சதுக்கத்தில் ஒன்று கூடிய தொழிலாளர்கள் தமக்கு 8 மணிநேர வேலை நேரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக கோஷமெழுப்பினார்கள். இந்த கோஷத்தைக் கண்டு கொதித்தெழுந்த முதலாளிகள் தமது ஏவல் நாய்களை அவிழ்த்துவிட்டனர் துப்பாக்கியைக் கையிலேந்திய அந்த ஏவல் நாய்கள் கண்மூடித்தனமாக துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தனர். அவ்விடத்திலேயெ கூருண்டு விழுந்த பல தொழிலாளர்களின் இரத்தத்தால் அந்தச் கதுக்கமே ரத்தக்காடாகியது. அன்றைய தினம் உயிர் நீத்த தொழிலாளர்களை உலகம் பூராவுமுள்ள தொழிலாளர்கள் ஒன்று சேரும் தினமாகும்.

உலகம் மனித உழைப்பைக் கொண்டே உருவாக்கப்படுகிறது. அந்த உழைப்பை சிந்துபவர்கள் உழைக்கும் மக்கள். சரியாகச் சொல்வதாயிருந்தால் தொழிலாளர்கள். இந்த உலகை கட்டியெழுப்பும் மனிதர்களுக்காக ஒரே ஒருநாள்தான் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த ஒரு நாள் கூட முதலாளித்துவ சுரண்டும் வர்க்கம் மனமிறங்கி பெற்றுத்தந்த ஒன்றல்ல. போராடி பெற்றுக் கொண்ட தினம். தொழிலாளர்கள் போராடி பெற்றுக் கொண்ட அந்த நாளைப் பற்றிய கதைகள் போதுமான அளவிற்கு வரலாற்றில் பதியப்பட்டுள்ளன. ஆகவே அந்த கதையை மீண்டும் மீண்டும் உச்சரிப்பதற்குப் பதிலாக, இன்றைய நிலையை குறித்தே பேச வேண்டியிருக்கிறது. வருடத்தின் 365 நாட்களிலும் தமக்கென ஒரு நாள் ஒதுக்கப்பட்ட தினத்திலிருந்து, அந்த தினத்தை நினைவு கூறுவதற்காக மே மாதம் முதலாம் திகதி உழைக்கும் மக்கள் கோஷங்களை எழுப்பிக் கொண்டு ஊர்வலம் போனார்கள். அதில் கலந்துக் கொள்ளும் தொழிலாளர்களின் போர்க் குணத்தால் அந்த ஊர்வலங்கள் களைகட்டப்பட்டன. “ உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருவீர்”, தொழிலாளர்களின் உரமைகளைப் பெற்றுக் கொடு”, ”சோஷலிஸ அகிலம் ஓங்குக” என்ற கோஷங்சள் வானைப பிளக்கும்,

இன்றைய நிலையில் சில அரசியல் கட்சிகள் தமது பலத்தைக் காட்டுவதற்காக சோற்றுப் பார்சலையும், சோமபானத்தையும் கொடுத்து கட்சி ஆதரவாளர்களையும், அங்கத்தினர்களையும் திரட்டிக் கொண்டு ஊர்வலம் போகிறார்கள். அலலங்கார மேடைகளை அமைத்து, அரசியல்வாதிகளும், தொழிற் சங்கத் தலைவர்களும் தொண்டை கிழியக் கத்துகிறார்கள். முதலாளிவத்திற்கு முட்டுக் கொடுத்து, உல்லாசத்தை அனுபவிக்கும் செஞ்சட்டைக் காரர்களும் தங்களை அடையாளம் காட்டிக் கொள்வதற்காக அதே முதலாளித்துவ மேடைகளில் தொழிலாளர்களின் உரிமைகளைப் பற்றி பேசுகிறார்கள். வெட்கம் கெட் ஜன்மங்கள். ஆதரவாளர்கள் மேடைகளுக்கு அருகில் இருந்துக் கொண்டு கை தட்டி ஆரவாரம் செய்கிறார்கள். கூட்டம் முடிந்த பின்னர் வீட்டுக்குப் போய் நிம்மதியாகத் தூ ங்குகிறார்கள். அதோடு மே தினம் முடிந்து விட்டதா? தமது கட்சித் தலைவர்களுக்கும், கட்சிக்கும் தமது ஆதரவை தெரிவித்து விட்டோம். இனி அடுத்த மே தினம் வரை எந்த ஆர்ப்பாட்டமோ, போராட்டமோ கிடையாது என்ற எண்ணத்திலா நிம்மதியாக உறங்குகிறார்கள். அது தான் இல்லை. மறுநாள் வாழ்வாதாரத்திற்காக ஓடி ஓடி உழைக்க வேண்டுமே.

இதே நேரத்தில் நாங்கள் இன்னொன்றையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அதுதான் ஊர்வலங்களில் எழுப்பப்படும் கோஷம். இந்தக் கோஷங்களில் பொருளாதார மற்றும் நலன்புரி கோரிக்கைகளே பெரும்பாலும் காணப்படுகின்றன. அவை மிகவும் கவர்ச்சிகரமான வார்த்தைகளால் அலங்கரிக்கப்படுகின்றன. எங்களுக்கு ஆகக் குறைந்த வாழ்க்கை நிலையையோ, ஆகக் குறைந்த மனித உரிமைகளையோ தராத ஆட்சியாளர்களிடமே நாங்கள் இந்தக் கோரிக்கைகளை முன்வைக்கின்றோம். ஆனாலும், இந்தக் கோரிக்கைகள் கோஷங்களாக முன்வைக்கப்பட்டாலும் ஆட்சியாளர்கள் அவற்றை நிறைவேற்றப் போவதில்லை. அவற்றை நிறைவேற்ற வேண்டிய அவசியமும் அவர்களுக்கு கிடையாது. அதற்கான ஆற்றலும் அவர்களுக்குக் திடையாது.

அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள், உறுப்பினர்கள் ஆகியோர் தமது அன்றாட வாழ்வாதாரத்திற்காக ஏதோ ஒரு வகையில் யாரோ ஒருவருக்குக் கீழ் ஊழியம் செய்கிறார்கள். பொதுவாக எடுத்துக் கொண்டால் அவர்கள் ஒவ்வொரு அரசியல் கட்சியினதும் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளகளேயன்றி தொழிலாளர்களல்ல. ஆகவே அவர்கள் தொழிலாளர்கள் என்ற வகையில் ஊர்வலத்தில் கலந்துக் கொள்வதில்லை. குறித்த கட்சியின் ஆதரவாளர், செயற்பாட்டாளர் என்ற வகையிலேயே கலந்துக் கொள்கின்றனர். இடதுசாரி கட்சிகளின் தலைவர்களும் சரி, ஆதரவாளர்களும் சரி ஊர்வலம் செல்வதில் தவறேதும் கிடையாது. அதுவும் வர்க்கத்தை பிரதிநித்துவம் செய்யும் விதத்தில் என்றால் மட்டுமே. அதை விடுத்து கட்சியின் பலத்தைக் காட்டுவதற்காகவோ, உறுப்பினர்களை ஆகர்ஷித்துக் கொள்வதற்காகவோ அப்படிச் செய்வதாயிருந்தால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது. என்றாலும், இன்றைய மே தினம் அப்படித்தான் நினைவு கூறப்படுகிறது என்பதை சொல்லித்தான ஆக வேண்டும். அதனால்தான மே தினத்திற்காக தொழிலாளர்களை அணிதிரட்ட செல்லும் இடதுசாரி கட்சிகளின் தோழர்களால் தொழிலாளர்களை அணிதிரட்ட முடியாதுள்ளது. தொழிலாளர் தினத்தின் உண்மையான தாத்பரியத்தை அறியாத வரை, அரசியல் ரீதியான அறிவு அவர்களுக்கு வழங்கப்படாத வரை உண்மையான தொழிலாளர்களை, உண்மையான இடதுசாரிகளோடு ஊர்வலத்தில் அணிவகுக்கச் செய்ய முடியாதுள்ளது.

அப்படியானால் இடதுசரி இயக்கதிற்கு உள்ள கடமைதான், தொழிலாளர்கள் முன்னிலையில் தமது இயலாமையையும், ஆற்றலின்மையையும், அவசியமின்மையையும் வெளிப்படுத்தும் ஒவ்வொரு நிமிடத்திலும் தொழிலாளிக்கு இந்த முதலாளித்துவத்தின் சுபாவத்தை புரிய வைக்க வேண்டும், மே தினத்தையோ அல்லது போராட்டக் களத்தையோ அந்த விளக்கத்தை பெற்றுக் கொடுக்கும் கல்விக் கூடமாக மாற்றாத வரை, நிறைவேற்ற முடியாத கோஷங்களை ஏந்திக் கொண்டு ஊர்வலம் செல்ல தொழிலாளர்கள் வருவார்கள் என்பது நகைப்புக்கிடமான விடயாமாகும்

எனவே, தொழிலாளர் வர்க்கத்தோடு நகைச்சுவை நாடகம் நடத்தாமல் அவர்களுக்கு அரசியல் அறிவை பெற்றுக் கொடுப்பதற்காக செயலில் இறங்க வேண்டும். அதற்கு இடதுசாரிகள் தயாராக இருக்க வேண்டும். பொருளாதார கோரிக்கைகளையும் தாண்டிச் செல்லக் கூடிய அரசியல் போராட்டத்திற்காக தொழிலாளர்களை முன்வரச் செய்வது இடதுசாரிகளின் கடமையாக இருக்கின்றது. அதற்காக “ என்ன செய்ய வேண்டும் ” என்பதை நாங்கள் சொல்லாவிட்டாலும், லெனின் அதனை குறிப்பிட்டுச் சென்றுள்ளார் என்பதை மட்டும் குறிப்பிட வேண்டியுள்ளது.

“ கட்சி அணிகளுக்கும், உழைக்கும் வர்க்கத்திற்கும், மக்களுக்கும் சரியாக பயிற்சியளிப்பதற்கு சரியான வழி, கட்சியின் தவறுகளை மனப்பூர்வமாக வெளிப்படுத்தி, அது தோன்றிய காரணங்களை ஆய்வு செய்து அதை களைவதற்கான வழிமுறைகளை எடுத்துக் கூறுவதாகும்.

---தோழர் லெனின்---

> **“ உலகம் மனித உழைப்பைக் கொண்டே உருவாக்கப்படுகிறது. அந்த உழைப்பை சிந்துபவர்கள் உழைக்கும் மக்கள். சரியாகச் சொல்வதாயிருந்தால் தொழிலாளர்கள். ”**



# ஒடுக்கப்பட்ட கரங்கள் மீண்டும் எழும்



> **எதிரிகள், துரோகிகள் இல்லாத இடம் எங்கு உண்டு. போராட்டங்களின் போதும், போராட்டங்களின் வெற்றிக்குப் பின்பும் எதிரிகள், துரோகிகள் இருந்து கொண்டுதான் இருப்பார்கள்.**

இரவு பகல் என்றில்லாமல் கரியபுகை திறந்த வெளியெங்கும் நிறைந்து வழியும். குண்டுகளின் மரண வேட்டுக்கள் வீசி அடித்த வினாடிகளில் சின்னக்குஞ்சுகளின் சிரிப்புக்கள் செத்துப் பேகும். ஓடிக்கொண்டிருந்த மனிதர்களின் வியர்வையுடன் நிகழ்கால வாழ்க்கை,எதிர்கால நம்பிக்கைகள் எல்லாமே கசிந்து காற்றிலே கரைந்து போகும். காட்டுவழி எங்கும் போக்கிடம் இன்றி போய்க்கொண்டிருந்த மனிதர்களிடம் மரணபயம் ஒன்றே மிச்சமிருந்தது. ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் மனிதகுலத்தின் மனச் சாட்சியை அந்த மனிதர்களின் மரண ஓலங்கள் பிடித்து உலுப்பிக் கொண்டுதான் இருக்கும். இதயமுள்ளவர்களின் கண்களில் இருந்து கண்ணீரும் செந்நீரும் கரைந்து கொண்டு தான் இருக்கும்.

இந்த பேரழிவு, தமிழ்ச் சமுதாயத்தின் பல தலைமுறைகளின் வாழ்வையும் வளத்தையும் மண்ணோடு மண்ணாக புதைத்த பெரும் அவலம் ஏன் நிகழ்ந்தது. ஈழ இயக்கங்களின் குறிப்பாக புலிகளின் பிழையான அரசியலா? துரோகிகள் ஊடுருவியதாலா? இலங்கை அரசாங்கங்களின் சமாதான பேச்சுவார்த்தைகளை சரியான முறையில் பயன்படுத்தாமல் விட்டதாலா? இந்தியாவை பகைத்ததாலா? அமெரிக்கா, மேற்கு நாடுகள், ஐக்கிய நாடுகள் சபை எனப்படும் சர்வதேசத்தின் கருணையை பெற்றுக் கொள்ளாததாலா?

ஈழவிடுதலை இயக்கங்களின் அரசியல் எப்போதும் மாணவர்கள், இளைஞர்களின் அரசியலாகவே இருந்தது. அதனால் அது தவிர்க்க முடியாதபடி ஊசலாடும் தன்மை கொண்டதாகவும், தமிழ் குறுந்தேசியவாதத்தில் இருந்து தமிழ் பாசிசமாக மாறி மற்றத்தேசிய இனங்களை விரோதிகளாக்கி இறுதியில் தன் சொந்த தமிழ் மக்களையே சிறை பிடித்து பலி கொடுத்தது. ஈழ விடுதலைப் போராட்டம் என்றைக்குமே மக்கள் போராட்டமாக இருந்ததில்லை. யாழ்ப்பாணத்தை இலங்கை இராணுவம் கைப்பற்றிய போது புலிகள் மக்களை தென்மராட்சிக்கு பலாத்காரமாக வெளியேற்றி பின்பு வன்னிக்கு போகச் சொன்ன போது பெரும்பாலான மக்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப்பாணத்திற்கு திரும்பிப் போனதும் இறுதியில் வன்னிப் போரின்போது குழந்தைகளை கட்டாயமாக புலிகள் அமைப்பில் சேர்த்ததும், பொதுமக்களை தப்பியோடாமல் ஆயுதமுனையில் நிற்க வைத்து பலி கொடுத்ததும் ஈழவிடுதலைப் போராட்டம் என்றைக்குமே மக்கள் போராட்டமாக இருந்ததில்லை என்பதை இரத்த சாட்சியங்களாக எடுத்துச் சொல்கின்றன.

எதிரிகள், துரோகிகள் இல்லாத இடம் எங்கு உண்டு. போராட்டங்களின் போதும், போராட்டங்களின் வெற்றிக்குப் பின்பும் எதிரிகள், துரோகிகள் இருந்து கொண்டுதான் இருப்பார்கள். போராட்டங்களில் தோழர்களாக இருந்தவர்கள் பின்பு துரோகிகளாக மாறியிருக்கிறார்கள். சிலர் இறுதிவரை தம்மை காட்டிக்கொள்ளாமல் சந்தர்ப்பங்களிற்கு காத்திருப்பார்கள். புரட்சிகர கட்சியினாலும், அர்ப்பணிப்பும் சமத்துவமும் மனதில் கொண்ட தோழர்களினாலுமே துரோகிகளை முறியடிக்க முடியும். மேதகுகள், பெரியய்யாக்கள், தானைத் தலைவர்கள் என்று அதிகார மையங்களை உருவாக்கும் அமைப்புக்கள் எதிர்வினையாக துரோகிகளையும் இலகுவாக உருவாக்கியே தீரும்.

வலதுசாரி இலங்கை அரசுகள் எப்போதுமே மக்களிற்கு எதிரானவை. எழுபதுகளில் முப்பதினாயிரம் சிங்கள மக்களைக் கொன்ற சிறீமாவின் சுதந்திரக்கட்சி அரசாகட்டும், தொண்ணூறுகளில் அறுபதினாயிரம் பேரைக் கொன்ற பிரேமதாசாவின் ஐக்கிய தேசியக்கட்சி அரசாகட்டும், வன்னியில் நாற்பதினாயிரம் தமிழ் மக்களைக் கொன்ற மகிந்தாவின் அரசாகட்டும் அவை என்றைக்கும் மக்களிற்கு எதிரான அரசுகள். அவை எந்தப் பிரச்சனைகளையும் கொலைகளாலும், அடக்குமுறைகளாலும், அச்சுறுத்தல்களாலும் அழிப்பதையே தமது வழிமுறையாகக் கொண்டவர்கள். தமது சூழலை நாசமாக்கும் குப்பை மேடுகளிற்கு எதிராகப் போராடும் அப்பாவிப் பெண்களையே கைது செய்பவர்கள்பிரச்சினைக்கு தீர்வு தருவார்கள் என்பதை விட அயோக்கியத்தனம் எதுவுமில்லை.

தனது சொந்தநாட்டு மக்களின் வாழ்விற்கும், வாழ்வின் ஆதாரமான இயற்கைக்கும் அழிவு செய்து வரும் பன்னாட்டு,உள்நாட்டு முதலாளிகளிற்கு எதிராகப் போராடும் ஏழை எளிய மக்களைக் கொன்று குவிக்கும் இந்திய அரசு, இலங்கைத் தமிழ்மக்களைக் காப்பாற்றும் என்பது கடைந்தெடுத்த பொய். ராஜிவ்காந்தி அனுப்பிய ஆக்கிரமிப்பு ராணுவத்தினால் கொல்லப்பட்டவர்களின் மரண ஓலங்களும், விதவைகளாக்கப்பட்ட பெண்களின் கதறல்களும் இன்னும் காற்றிலே கரைந்து போய்விடவில்லை. குவாண்டனாமா வளைகுடாவிலும், அபு காரிப் சிறைச்சாலையிலும் சித்திரவதை செய்பவர்கள் இலங்கை அரசின் மனிதகுலத்திற்கு எதிரான படுகொலைகளை எதிர்ப்பார்கள், நியாயம் வழங்குவார்கள் என்பது இன்னொரு குரூரமான பொய். நவதாராளவாத பொருளாதாரத்திற்காக உலகம் முழுக்க கொலைகள், கொள்ளைகள் செய்பவர்கள் தமிழ் இனத்தின் கண்ணீரைத் துடைப்பார்கள் என்பது மக்கள் தமது சொந்தக் காலில் எழுவதை மீண்டும் மீண்டும் தடுக்கும் பிற்போக்குத் தரகர்களின் மோசடிகள்.

சிங்களமக்கள் இருமுறை தோற்கடிக்கப்பட்டனர். தமிழ் மக்களின் போராட்டம் முள்ளிவாய்க்காலின் குருதி வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டது. இன்று முஸ்லீம் மக்கள் மேல் தாக்குதல்கள் தொடருகின்றன. மலையகமக்கள், இலங்கையின் பொருளாதாரத்தின் பெரும் பகுதியை தமது உழைப்பை பிழிந்து கொடுப்பவர்கள் பசித்த வயிறுடன் கால் நீட்டமுடியா தகரக் குடிசைகளிலே தவிக்கிறார்கள். இந்த ஒடுக்கப்படும் எல்லா மக்களும் இணைந்து போராடுவதன் மூலமே பலம் பொருந்திய இலங்கை அரசை வீழ்த்த முடியும். தனித் தனியே போராடும் போது இனவாதம், மதவாதத்தை பாவித்து இலங்கை அரசு பொது மக்களையே ஒருவருக்கு எதிராக ஒருவரை போராடவைக்கும்.கடந்தகால வரலாறுகள் அதையே காட்டி நிற்கின்றன.

இது மிகவும் கடினமான போராட்டம். மக்களின் மனதில் ஆழமாக இறுகிப் போயிருக்கும் இனவாதத்தை உடைத்தெறிய வேண்டிய போராட்டம். பிற்போக்குவாதிகளையும், பிராந்திய வல்லரசுகளையும், பிணந்தின்னும் சர்வதேச கழுகுகளையும், இலங்கையின் பாசிச அரசையும் எதிர்த்து எழவேண்டிய போராட்டம். இதற்காக நாம் அனைவரும் கடக்க வேண்டியது பெருந்தூரம். ஆயினும் அடி கருகிய புற்கற்றைகளிலிருந்து இரண்டொரு பசும்முளைகள் வெந்து தணிந்த சாம்பல்களில் இருந்து எழத்தான் செய்யும்.

# மே தினம்

அனைத்துமே போராட்டங்கள் மூலமாகவே கிடைக்கின்றது வரப்பிரசாதங்களால் அல்ல. மே தினம் சிக்காகோ பேரெழுச்சியின் விளைவாக இருந்தாலும் அது இரத்தக் கரைகளுடனும் போராட்டங்களுடனும் தூக்குக் கயிற்றின் முடிவிலுமே ஆரம்பமானது. இதற்கு முன்பும் 18ம் நூற்றாண்டின் இறுதியிலும் 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வளர்ச்சியடைந்த நாடுகளின் தொழிலாளர்கள் நாளொன்றுக்கு 12 - 18 மணித்தியாலங்கள் வரை கட்டாய வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர் இதற்கெதிராக மக்கள் போராட்டம் நடத்தினர். அவர்களில் குறிப்பிடத்தக்க கோரிக்கையாக இருந்தது. 10 மணித்தியால வேலை என்பதாகும். இதே போராட்டம் பிரான்ஸ், அவுஸ்திரேலியா, ரஸ்யா என இன்னும் பல நாடுகளிலும் நடைபெற்றன. அனைத்துத் தொழிலாளர்களினதும் ஒரே கோரிக்கையாக இருந்தது வேலை அதற்குப்பின்னரான ஓய்வு ஆனால் அது சிக்காகோவில் நடைபெற்ற போராட்டத்தின் காரணமாகத்தான் நாளொன்றுக்கு வேலை செய்யும் நேரம் 8 மணித்தியாலங்களாக ஆக்கப்பட்டது மே1 ம் திகதியை சர்வதேச தொழிலாளர் தினமாகக் கொண்டாட அங்கு முடிவு செய்யப்பட்டது.

தொழிலாளர்களின் ஒட்டு மொத்த நோக்கம் 8 மணி நேர வேலை அதற்குப்பின்னரான ஓய்வு குடும்ப வாழ்வில் ஈடுபடல் உல்லாசமாக வாழுதல் போன்றவையாகும். ஆனால் இவை அனைத்தும் தொழிலாளர்களுக்கு கிடைத்ததா என்று பார்த்தால் அது கேள்விக்குறியாகவே எஞ்சியிருந்தது. ஆரம்ப காலத்தில் போராட்டங்களை மேற்கொண்டு தங்களது உரிமைகளை பெற்றுக்கொள்ள நினைத்த தொழிலாளர்கள் பின்னர் அவைகளை முதலாளித்துவத்திடம் விட்டுக்கொடுத்தனர். ஆரம்பத்தில் 8 மணி நேர வேலை கேட்டு போராடிய தொழிலாளர்கள் தற்போது பல்தேசியக் கம்பனிகளிடம் தங்களை அடகு வைத்துள்ளார்கள் முன்பு அதித வேலை என்ற பெயரில் செய்த வேலைகள் இப்பொழுது ஓவர் டைம் என்ற அடிப்படையில் செய்கிறார்கள் முன்னைய தொழிலாளி ஒரு பொருளை தானே உற்பத்தி செய்தான். வளச்சியடைந்திருக்கும் இப்போதைய கால கட்டத்தில் பல தொழிலாளிகள் சேர்ந்து ஒரு பொருளை உற்பத்தி செய்கிறார்கள் அதனால் தொழிலாளிக்கு தான் உற்பத்தி செய்யும் பொருள் பற்றிய போதிய அறிவு ஆளுமையில்லாமல் போகின்றது. ஒவ்வொரு முறையும் முதலாளித்துவ வர்க்கம் அதனது மாய வலைக்குள் தொழிலாளர்களை கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றது. தான் உற்பத்தி செய்யும் பொருளை தொழிலாளி நுகர முடியாமல் தவிக்கின்றான். அது வியாபாரப்பண்டம் மட்டுமே இப்படியாக முதலாளித்துவம் பல்தேசியக்கம்பனிகளை நிறுவி அதனூடாக தேவைக்கதிகமான உற்பத்திகளைச் செய்து உலகை விற்றலும் வாங்கலுக்குமான திறந்த சந்தையாக மாற்றியுள்ளது. இங்கு சமூக நலன் சமூகத்தின் மேம்பாடு கவனத்திற்கொள்ளப்படுவதேயில்லை. சார் மன்னனின் ஆட்சியின் கீழ் ரஸ்யத் தொழிலாளிகள் பெருந்துன்பங்களுக்கு ஆளானார்கள். அங்கும் 1895 - 1899ற்கு இடைப்பட்ட காலத்தில் நூற்றுக்கணக்கான வேலை நிறுத்தங்கள் செய்யப்பட்டன. 1896 ஏப்ரல் மாதத்தில லெனின் மே தினத்திற்காக எழுதிய சிறு பிரசுரத்தில் ரஸ்யத்தொழிலாளியின் நிலைமை குறித்து விரிவாக அலசியபோது ரஸ்யத்தொழிலாளர்களின் பொருளாதாரப்போராட்டம் அரசியல் போராட்டமாக எழுச்சி கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தினார். தொழிலாளர்களின் எட்டு மணி நேர வேலைக்கான போராட்டங்கள் மாபெரும் ரஸ்யப்புரட்சிக்கு வித்திட்டது. ஆனால் முதலாளித்துவம் தனது உற்பத்திப்பொறிமுறைகளை விரிவாக்கியதோடு மனிதனை முற்று முழுதாக இயந்திரத்தோடு தொடர்பு படுத்திவிட்டது. இதனால் சக ஊழியர் பற்றிய எண்ணம் குறைந்து மனிதன் இயந்திரத்தோடு வாழப்பழகிவிட்டான். உலகில் அரைவாசிக்கு மேற்பட்ட நாட்டு மக்கள் பட்டினியில் வாழ்கின்றனர். ஆனால் முதலாளித்துவ நாடுகள் தங்களது மேலதிக உணவு உற்பத்திகளை கடலில் வீசும் அளவுக்கு மிலேச்சத்தனம்



**“ தொழிலாளர்கள் முதலாளித்துவத்திற்குள் கட்டுண்டு கிடக்க வசதியாக முதலாளித்துவம் தங்களது பொறிமுறை-களை வளர்த்துள்ளது. ”**

கொண்டதாக உள்ளது. ஆரம்பத்தில் கூட்டாக உற்பத்தி செய்து சம பங்காக பிரித்துக்கொண்டே தங்களது தேவைகளை மனிதன் பூர்த்தி செய்து கொண்டான். அந்தக்கூட்டுச்சமூகத்தில் ஒற்றுமையும் மனித நேயமுமே காணப்பட்டது. முதலாளித்துவம் தனது வளர்ச்சியின் முதிர்ச்சிக்கட்டத்தில் இப்போது இருப்பதாகத் தோன்றுகின்றது. தொழிலாளர்கள் முதலாளித்துவத்திற்குள் கட்டுண்டு கிடக்க வசதியாக முதலாளித்துவம் தங்களது பொறிமுறைகளை வளர்த்துள்ளது. ஆனால் போராட வேண்டிய தொழிலாளர் வர்க்கம் இதனைப் புரிந்து கொள்ள முடியாமல் முதலாளித்துவத்திற்கு அடிமைப்பட்டிருப்பது தனது வாழ்வு பற்றிய அச்சத்தினாலேயேயாகும். ஆனால் உலகில் ஏற்பட்ட மாற்றங்கள் அனைத்தும் போராட்டங்கள் மூலமாகவே மாறியுள்ளன. அமைப்பு ரீதியான போராட்டங்களே அதிகளவு வெற்றி பெற்றுள்ளன. அன்று முதலாளித்துவம் நாடு பிடிப்பதற்காக ஆயுதச் சண்டைகளை நடாத்தியது. தற்போதைய காலத்தில் அதன் பொறிமுறையை மாற்றி உலக மக்களுக்கு வங்கிகளை அறிமுகப்படுத்தியது. தங்களது தேவைகளை பூர்த்தி செய்வதற்கு வங்கி சிறந்ததொரு நிறுவனம் என்று கூறியது. சிறிய தொகையை ஊதியமாகப் பெறும் ஒருவர் பெரிய முதலாளி ஆகலாம் என்று மோகம் காட்டியது இதனை சரியாக விளங்கிக்கொள்ளாத தொழிலாளர்கள் வங்கிகளில் கடன்களை பெற்றுக் கொள்ளத் துவங்கினார்கள்.இதனால் கடனோடு சேர்த்து வட்டியும் செலுத்த வேண்டிய நிலை தொழிலாளர்களுக்கு ஏற்பட்டது. தொழிலாளி மேலதிகமாக உழைக்க வேண்டிய கட்டாய நிலைமைக்கு தள்ளப்பட்டான் இதனால் வங்கிகளுக்கு அதிக இலாபம் கிடைத்ததோடு தொழிலாளி தான் வாழும் சமூக அமைப்பிலிருந்து தூ ரமாக்கப்பட்டான். அன்று மேலதிக நேர உழைப்பை எதிர்த்து போராடிய தொழிலாளி இன்று தான் கடன் சுமையால் மேலதிகமாக வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளான். இது முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் ஒரு படி நிலையாகும்.

ஆகவே தொழிலாளி தான் தொழிலாளி என்பதை முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும் ன்துமே போராட்டங்களூடாகவே பெற முடியும் என்பதை தொழிலாளி ஏற்றுக்கொள்ள வேண்டும் அதற்காக தான் வேலை செய்யும் இடத்தில் தொழிற்சாலையில் அமைப்பு ரீதியில் போராட்டங்களை மேற்கொள்ள வேண்டும் மே தினமானது முதலாளிகள் தொழிலாளிகளை மேயும் தினமாக இல்லாமல் தொழிலாளர்கள் தினமாக மாற்றப்பட வேண்டும் இதற்காக அனைத்து சர்வதேச தொழிலாளர்களும் அமைப்பு ரீதியாக ஒன்று பட்டு போராட முன்வர வேண்டும்.

# வட – கொரியா மீதான அமெரிக்காவின் மிரட்டலும், அதன் பின்னணியும்








கடந்த பத்து வருடகாலத்தில் , அமெரிக்க ஏகாதிபத்தியம் பல வழிகளிலும் நலிந்த நிலையை அடைந்து வருகிறது . உலகம் இரு அரசியற் துருவங்களாகப் பிரிந்திருந்த, சோவியத் வீழ்ச்சியடைந்த 1990 கள் வரையான காலகட்டம் வரை, அமெரிக்க பொருளாதாரமும் அதன் வளர்ச்சியும் மேற்படி "இரு அரசியற் துருவ" அடிப்படையிலேயே திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. அக்காலத்தில் பாதுகாப்பு மற்றும் யுத்தம் சார்ந்த ஆயுத உற்பத்தியும் , தொளில்நுட்பமும் அமெரிக்காவின் பொருளாதாரத்தில் பாரிய பங்கு வகித்தன .

NATO ஒப்பந்தம் ஊடாக மேற்கு ஐரோப்பிய கூட்டாளி நாடுகள், தென்-அமெரிக்க மற்றும் சில ஆசிய, ஆபிரிக்க அடிவருடி நாடுகள் அமெரிக்காவின் ஆயுத- தளபாட மற்றும் யுத்தம் சார் தொழில்நுட்பத்தை இறக்குமதி செய்வதன் மூலம் அதன் பொருளாதாரத்துக்கு பாரிய பங்களிப்புச் செய்தன . 1990 களுக்குப் பின் வந்த காலத்தில் அமெரிக்காவின் ஆயுத- தளபாட மற்றும் யுத்தம் சார் தொழில்நுட்ப ஏற்றுமதியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. தனது உற்பத்தியும், ஏற்றுமதியையும் சிவில் பாவனைப்பொருட்கள் சார்ந்து கட்டமைக்க வேண்டிய தேவை அமெரிக்காவிற்கு ஏற்பட்டது . அத்துடன் இருதுருவ உலக அரசியலில் வீட்சியின் பின்னான உலகப் பொருளாதார மாற்றமும் , புதிய சந்தை வாய்ப்பும் புதிய பொருளாதாரக் கொள்கையை உருவாக்க வேண்டிய தேவையும் அதற்கு ஏற்பட்டது . இந்த தேவைகளின் பின்னணியும் , முதலாளித்துவப் பொருளாதாரத்தின் இயல்பான மாற்றத்தின் அடிபடையிலும் உருவாக்கப்பட்டதே திறந்த நவதாராளவாத பொருளாதரக் கொள்கையும், அது சார்ந்த உலகமயமாக்கலும் ஆகும் .

இவ்வாறு உருவாகிய நவதாராளவாத பொருளாதர கொள்கையும், உலகமயமாக்கலும் ஒப்பீட்டளவில் அமெரிக்காவிற்கு பாரிய பொருளாதார வளர்ச்சியை பெற்றுக் கொடுக்கவில்லை . மாறாக எவரும் எதிர்பாராத விதத்தில் சீனா மிகப்பெரும் பொருளாதாரமாக வளர்ந்தது. அத்துடன் சீனா அமெரிக்காவின் சிவில் பாவனைப் பொருட்களின் இறக்குமதியை தனது கடன் மூலம் தீர்மானிக்கும் நாடாக மாறியது. அதேவேளை, அமெரிக்காவின் , சீனாவுக்கான ஏற்றுமதி பெரிய அளவில் வளர்ச்சியடையவில்லை . இதனால், மேற்கு ஐரோப்பிய மற்றும் ஜப்பானையும் மீறி அமெரிக்காவுக்கு கடன் வழங்கும் நாடுகளில் முதல் நிலையை சீனா அடைந்தது .

இந்நிலையில், 11 செப்டெம்பெர் 2001 நடந்த நியூயோர்க் தாக்குதலுக்கு பின்னர் நடைமுறைப் படுத்தப்படும் அமெரிக்கப் பொருளாதார - மற்றும் வெளியுறவு அரசியலானது, தனது வீழ்ச்சிசியடைந்த பொருளாதாரத்தை மறுபடியும் தூக்கி நிறுத்தும் முயற்சியையே குறிக்கோளாகக் கொண்டது. உதாரணமாக, ஆப்கனிஸ்தானின் மீதான அமெரிக்கப் படையெடுப்புக்கான காரணிகளாக , அங்கு தலிபான்களை விரட்டி அடித்து , ஜனநாயகத்தை உருவாக்கி, பெண் விடுதலையை முன்னெடுக்கப் போவதாகவே கூறப்பட்டது. அதே போன்றே , ஈராக் மீதான படையெடுப்பும் சதாமின் அரசை ஒழித்து

> **இவ்வாறு உருவாகிய நவதாராளவாத பெ-ாருளாதர கொள்கையும், உலகமயமாக்கலும் ஒப்பீட்டளவில் அமெரிக்காவிற்கு பாரிய பொருளாதார வளர்ச்சியை பெற்றுக் கொடுக்கவில்லை .**

, ஜனநாயகத்தை ஈராக்கில் உருவாக்கப் போவதாக அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் பிரச்சாரம் செய்தனர் . ஆனால், இன்று பகிரங்கமாக அனைவருக்கும் தெரியும், அமரிக்காவின் படையெடுப்பு ஜனநாயகத்தை மேற்படி நாடுகளில் உருவாக்க அல்ல . அல்லது அங்குள்ள பெண்களுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுக்கவல்ல . மாறாக , தனது புவியியல் , மற்றும் பொருளாதார நலன்களை விரிவாக்குவதற்கே. ஆப்கனிஸ்தானை அடிமையாக்கிக் கொள்வதன் மூலம் சீனா, ரஷ்யா மற்றும் ஈரான் போன்ற நாடுகளின் எல்லைகளில் தனது படைகளை நிறுத்துவதும், மேற்படி நாடுகளை தனது பூகோள - பொருளாதார நலனுக்கு இசைபாக இயங்க வைக்க முயல்வதே அமெரிக்காவின் திட்டம் .

இதன் பின்னணியிலேயே, அதாவது அமெரிக்கா தனது பொருளாதார மற்றும் பூகோள நலன்களை முன்னிறுத்தி நடத்தும் ஏகாதிபத்திய அரசியலின் தொடர்ச்சியாகவே , இன்று வட-கொரியா மீதான அமெரிக்க கிழட்டு -ஏகாதிபத்தியத்தின் மிரட்டலும் , அதற்கு எதிர்வினையாற்ற முயலும் வட-கொரிய மக்கள் குடியரசின், கிம் ஜுங் - உன் அரசின் செயற்பாடும் விளங்கிக் கொள்ளப்படவேண்டும்.

கடந்த 2010 வைகாசி மாதம் , «Naval Operations Concept 2010: A Cooperative Strategy for 21st Century Seapower» என்ற அரசியல் திட்டம், ஒபாமா அரசால் வெளியிடப்பட்டது . இந்தக் கடற்சார் பாதுகாப்பு - மற்றும் பொருளாதாரத் தந்துரோபாய திட்டமானது , தற்கால பொருளாதர வளர்ச்சியின் மையமாகவுள்ள பசுபிக் - இந்து சமூத்திரப் பிரதேசத்தை, அமெரிக்காவின் நலனுக்கிசையக் கையாள்வது எப்படி என்பதே உள்ளடக்கமாகக் கொண்டிருகிறது . இத்திட்டமானது குறிப்பாக கிழக்கு ஆசியாவின் மஞ்சள் கடலிலிருந்து , தென்-சீனக் கடல்வரை அமெரிக்காவின் ஆதிக்கத்தை இன்று நடைமுறைப்படுத்தும் வேலைகளின் அடிப்படையாகவுள்ளது.

இத்திட்டத்தின் முதல் வெளிப்பாடாக ஆவணிமாதம் 2010 இல் , தென் கொரியாவுடன் இணைந்து பாரிய முப்படைப்பயிற்சியை , வட-கொரிய எல்லையிலும் , அதன் மஞ்சட் கடற்பிரதேச எல்லையிலும் அமெரிக்கா நடாத்தியது . இது 1953 இல் கொரியா யுத்தம் முடிவுக்கு வந்த பின் முதல் முதலாக நடைபெற்ற பாரிய படைப்பயிற்சி என வர்ணிக்கப்படுகிறது .

மேற்படி அமெரிக்க - தென்கொரிய படைப்பயிற்சிக்கும் போர் ஒத்திகைக்கும் பதில் சொல்லும் விதத்தில், வட - கொரியா , தென் கொரியாவுக்கு சொந்தமான Yeonpueong தீவு மீது பாரிய பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டது. இதன் பின்வந்த நாளிலிருந்து இன்றுவரை அமெரிக்க - தென்-கொரிய இராணுவ - கடல்சார் எரிச்சலூட்டும் நடவடிக்கைகளுக்கு பதில்சொல்லி வந்த வட -கொரியா, தை 2013 இக்கு பின்வந்த காலத்தில், தனது அணுவாயுதத்தை, நீண்டதூர ஏவுகணையில் இணைத்து அமெரிக்க- மேற்கு கரையோரத்தின் மீதும், அமெரிக்க இராணுவம் நிலை கொண்டுள்ள சில பபிக் தீவுகள் மீதும் ஏவப் போவதாக சமிக்ஞை விட்டவண்ணமுள்ளது.

2013, சித்திரை மாத நடுப்பகுதியில் வெளிவந்த தகவலின் படி, மறுபடியும் தென்-கொரியா நிலக்கீழ் அணுவாயுதப் பரிசோதனையை மேற்கொண்டதாக

தெரிவிக்கப்படுகிறது . இது உண்மையானால், 9 ஒக்டோபர் 2006 , அணுவாயுதப் பரிசோதனையைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபையின் உதவியுடன், ஐந்து நாடுகளின் தலைமையில் ( அமெரிக்கா, சீனா , ரஷியா , ஜப்பான் , தென் - கொரிய ) வட -கொரியா கைச்சாத்திட்ட "உணவுக்கும் , அத்தியாவசிய தேவையை நிறைவேற்றவும் - அணுவாயுதப் பரிசோதனை நிறுத்தும் ஒப்பந்தம்" மீறப்பட்டுள்ளது.

இது ஒருபுறமிருக்க , வட - கொரியாவின் எதிர்வினையை முறியடிக்க , அமெரிக்க தனது பசுபிக் - மாறும் மேற்குக்கரை படையணியை யுத்தத்துக்கான ஆயத்தல் வைத்துள்ளதாக கூறப்படுகிறது . அத்துடன் தனது கடல்சார் தொலைத் தொடத்தொடர்பு கருவிகளையும் , கப்பல்களையும் கொரிய கடற்பிரதேசங்களின் நிறுத்தியுள்ளது .

சீனாவும் , ரஷியாவும் இது வரை மேற்படி படை நடவடிக்கைகளை கவனித்து வந்தாலும்

நேரடியாக இன்னும் தலையிடவில்லை .

ஆனால், மானிட விடுதலை வேண்டி நிற்கும் பலரும் , மக்கள் நலம் சார் உலகப் புத்தி சீவிகளும் அமெரிக்காவின் , ஏகாதிபத்திய நலம்சார் யுத்தவெறியை எதிர்பதுடன் , வட- கொரியாவின் அணுவாயுதச் சவடால்களையும் கண்டித்துள்ளனர் .

அதில் குறிப்பிடத்தக்கவர் கியுபா நாட்டின் முன்னாள் தலைவர் பிடல் காஸ்ட்ரோ .

"தற்போதுள்ள சூழலில் போர் தவிர்க்கப்படவில்லை என்றால், வடகொரியா - தென் கொரியா என இரு பகுதி மக்களும், அல்லது அனைவரும் எவ்விதப் பயனுமின்றி மிக

தொடர்ச்சி 15ம் பக்கம்

### வட கொரியா மீதான...14ம் பக்க தொடர்ச்சி

மோசமான முறையில் மடிவார்கள்...

தற்போது வடகொரியா பல்வேறு வகையில் தொழில்நுட்ப ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும் பல்வேறு இலக்குகளை அடைந்து, செயல்வடிவமாக்கி நிஷரூபித்துள்ளது. வடகொரியாவின் மிகச்சிறந்த நண்பன் என்ற முறையில் எனக்கு கடமை இருக்கிறது. அணுஆயுத போர் மூண்டால் இந்த பூகோளத்தில் உள்ள 70 சதவிகித மக்கள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள். இது நியாயமற்றது. இந்த மோதல் நிகழ்ந்தால், பாரக் ஒபாமா வின் இரண்டாவது ஆட்சிக்காலமும் அவ ரது பிம்பமும் பெரும் வெள்ளத்தில் பேரழிவு ஏற்பட்டது போல் அடியோடு புதைக்கப்படும். அமெரிக்க வரலாற்றில் மிகவும் கொடூரமான, மோசமானவராக ஒபாமா பதிவு செய்யப்படுவார். போரை தவிர்ப்பது என்பதும் அமெரிக்க மக்களைப் பாதுகாப்பதும் ஒபாமாவின் கடமை! ” என பிடல் காஸ்ட்ரோ தெரிவித்துள்ளார் .

பிடல் காஸ்ட்ரோ கூறுவது போன்று ஒரு அணுவாயுத யுத்தம் எவருக்கும் லாபம் தரப் போவதில்லை. வெறும் மானிட அழிவிலே போய் முடியும். அதனால் இப்படியான சர்வதேச அரசியல் சூழ்நிலையைத் தவிர்க்க, அமெரிக்காவினதும் மற்றும் ஏகாதிபத்திய நாடுகளினதும் பொருளாதரா - யுத்த வெறிக்கு எதிராக, சர்வதேசரீதியாக பாரிய மக்கள் இயக்கங்களை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு அனைத்து மக்கள்நலம் சார் சக்திகள் முன்னும் உள்ளது.

### அரசாங்கத்தின் ...1 ம் பக்க தொடர்ச்சி

சக்தியை இழந்து திண்டாட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

2012 நடுப்பகுதியில் எரிபொருள் விலை தொடர்ந்து அதிகரித்ததோடு, மக்களை பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கியது. எரிபொருள் விலையேற்றம் நாட்டின் அனைத்து துறைகளையும் பாதித்தது. உலகச் சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்படும்போது அரசாங்கமும் விலையை அதிகரிக்கிறது. ஆனால் உலகச் சந்தையில் எரிபொருளின் விலை குறையும்போது அரசாங்கம் விலையைக் குறைப்பதில்லை. அரசாங்கத்தின் ஊதாரித்தனமான செலவுகளை ஈடு கட்டுவதற்காக எரிபொருளுக்கு அதிகமாக வரி அறவிடுகிறது.

கூடிய விரைவில் பஸ் கட்டணமும் அதிகரிக்கப்படவிருக்கிறது. எரி பொருளுக்கான வரியினாலும், பஸ் கட்டண அதிகரிப்பினாலும், துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களை மின்சாரக் கட்டண அதிகரிப்பின் மூலம் இருட்டுக்குள் தள்ளிவிட்டிருக்கின்றது.

### ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்தில்..6ம் பக்கத் தொடர்ச்சி

“நாங்கள் நாடு கேட்கிறபோது கொடுத்துவிட்டால் எவருக்கும் சிக்கலில்லை. இல்லையென்றால் எங்களுக்கு வேறு வழியில்லை. சிங்களவன் எங்களிடத்தில் நாடு கேட்கிற நிலையை உருவாக்குவதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை. சாகப் பயந்தவன் சிங்களவன். பன்னாட்டுப் படையைத் துணைக்கழைத்துக் கொண்டு பெண்டுகள் போல ஒண்டி வருவான்.”

”வாழும் உரிமை எவருக்கும் உண்டு. ஆளும் உரிமை எமக்கே உண்டு.”

”தமிழ் நாட்டின் முதலமைச்சராக ஒரு தமிழ் பிள்ளை வரப்போகிறான். ஒரு மானத் தமிழ் பிள்ளை. கட்டாயம் நடக்கப் போகிறது. நாந்தான் என்று நினைக்காதையுங்க. நான் இல்லாவிட்டாலும் என்னையே மாதிரி ஒருத்தன் வருவான். என்னை விட வேகமான ஒருத்தன் வருவான்.”

“என்னையெல்லாம் தமிழ்நாட்டிலே ஒரு வேற்றுக்கிரக மனிசர்களை பார்ப்பது போல் பார்க்கிறார்கள்.”

”இனத்துரோகம் என்பது இனத்துரோகி என்பது என் அன்பு மக்களே, கருணா மட்டுமல்ல. தாய்மொழி தமிழோடு பிறமொழி கலந்து பேசுபவர் பிள்ளைகளுக்கு தமிழ்ப் பெயர் சூட்டாதவர் இவர்கள் எல்லோரும் இனத் துரோகிதான். வரலாற்றுப் பெருந் துரோகி.”

”சிங்களவன் முட்டாள்”

ஒன்றுபட்ட இலங்கைக்குள் அனைத்து இனப் பாட்டாளி மக்களையும் பிளந்து வைத்திருந்த வைத்திருக்கும் இனவாதத்தினை எதிர்த்து ஒரு ஒன்றுபட்ட போராட்டம் மூலம் உழைக்கும் மக்களுக்கு சுபீட்சம் தரும் சோசலிசப் பாதையினை தெரிவுசெய்து அனைத்து இனவாத இனவொடுக்குமுறைகளையும் தகர்த்தெறிய அனைத்து இனங்களும் ஒருசேரப் போராடும் செயற் தளத்திற்கான அடிப்படையினை உருவாக்கும் சமவுரிமை இயக்கத்தின் கிளைகளும் ஐரோப்பிய நகரங்களில் அங்குரார்ப்பணம் செய்து, முன்னிலை சோசலிசக் கட்சியின் தோழர் குமார் குணரத்தினம் அவர்களால் சிறப்புரைகள் நிகழ்த்தப்பட்டது.

இலங்கையில் சிங்கள பேரினவாத இன மத ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் இனவாதத்திற்கு எதிராகவும் இலங்கையில் சமவுரிமை இயக்கமானது சிங்கள மக்கள் மத்தியிலும் தமிழ்மக்கள் மத்தியிலும் பல்வேறு போராட்டங்களை சிங்கள மக்களைக் கொண்டே நடாத்தி நடைமுறையில் போராடுகின்றபோது, அதற்கு நேரெதிரான திசையில் இனப்பிளவை நிரந்தரமாக்கவும் இனவுணர்வுகளை கிளறிவிட்டு சுயலாபம் பார்க்கும் சீமான் போன்றவர்கள் வரலாற்றில் முதல் தடவையாக ஏற்படக்கூடிய இனக்கூட்டுப் போராட்டங்களை சிங்கள அரசு எப்படி நேரடியாகவும் பொதுபல சேனா போன்ற அமைப்புக்கள் மூலமும் பேரினவாதத்தை தூண்டிவிடவும், அதேவேளை இந்தப் பேரினவாதத்திற்கெதிரான முற்போக்கு சக்திகளை நசுக்கவும் ஒடுக்கவும் முனைகின்றதோ அதேபோல் சிங்களமக்கள் மத்தியில் பேரினவாதத்தை தூண்டிவிடுகிற அதேபோக்கில் இனப்பிளவை வளர்க்கும் தனது வீராவேசப் பேச்சுக்களை புலம்பெயர் மக்கள் மத்தியில் தமிழினவாதத்துக்கு ஊட்டம் கொடுத்து ஊக்குவிப்பதன் மூலம் தனது இந்திய அரசியலுக்கு இலாபம் தேடுகின்றார் சீமான்.

தமிழ் சமூகத்தை இனவாதத்தின் பக்கம் தள்ளிவிடுவதும் அதனை பயன்படுத்தி சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களுக்கிடையில் இனவாதத்தை விதைப்பதும் பாரிய பயங்கர நிலைமையொன்றை உருவாக்கி தமது கருத்துக்கு மாற்றமான கருத்து சமூகமயமாவதை தடுப்பதுவுமே என்பது தெளிவு.

தென்னிந்திய மாணவர்களின் தன்னெழுச்சிப் போராட்டங்கள், அவர்கள் முன்னிறுத்தும் கோரிக்கைகளை பற்றிய கருத்துக்கள் ஒருபுறமிருக்க, சீமான் அவர்களே நாங்கள் உலகெங்கிலுமுள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களுடன் இணைவோம். அதேவழியில் எங்களுக்காக போராட கிளம்பும் இந்திய ஒடுக்கப்பட்ட மக்களோடு நாங்கள் கரம் கோர்ப்போம். ஆனால் இன மத வேறுபாட்டை இனவுணர்வுகளைக் கிளறி சுய அரசியல் இலாபம் அடைவதற்காய் எங்களது பிரச்சிபெட்டிக் கடைக்காரனோடு தாம் வைத்துப் பார்ப்போம். நாங்கள் ஒடுக்கப்படுவதும் இனவொடுக்குமுறை எங்களை பலிகொண்டதும் பலிகொள்ள முனைவதும் மறுக்க முடியாதவை. எங்களை நாங்கள் பசி தீர்க்க முனையும் அந்தப் பெண் குழந்தைகளுடன் வைத்துப் பார்க்கிறோம். எங்களது அவலத்தை உங்களது இலாபத்துக்காக பயன்படுத்தாதீர்கள்.

ஓராயிரம் பேர் மண்டபத்தில் குவிகிறார்களா என்பதல்ல பிரச்சினை. மாற்றங்களை எங்களால் உருவாக்க முடியுமா என்பதே நோக்கு. அனைத்து விதமான இனவாத உணர்வுகளையும் களைந்து மனிதத்தை உருவாக்குவோமாயின் அதுவே எமக்கு கிடைக்கும் வெற்றி.

இலங்கையில், புலம்பெயர் நாடுகளான இத்தாலியில், பிரான்சில், இங்கிலாந்தில், சுவிஸ்நாட்டில், டென்மார்க்கில், நோர்வேயில், சைப்பிரசில் நாங்கள் மனிதர்களை தரிசித்து வருகின்றோம்.

ஓராயிரம் பேர் மண்டபத்தில் குவிகிறார்களா என்பதல்ல பிரச்சனை. மாற்றங்களை எங்களால் உருவாக்க முடியுமா என்பதே நோக்கு. அனைத்து விதமான இனவாத உணர்வுகளையும் களைந்து மனிதத்தை உருவாக்குவோமாயின் அதுவே இலங்கை வாழ் அனைத்து இன மக்களுக்கும் கிடைக்கும் வெற்றி.

### அமைதி காக்கும்...3ம் பக்கத் தொடர்ச்சி

நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு 7 நாட்களுக்குள் அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. அமைப்பின் அனைத்து உறுப்பினர்களினதும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், அந்த அமைப்பின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தடைகள் ஏற்படாதவாறு பாதுகாப்பதற்குமான பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளதாக கலகொட அத்தே ஞானசார தேரர் அச்சந்தர்ப்பத்தில கூறியிருந்தார். இந்த செய்திகளை வைத்துப் பார்க்கும் போது பிரச்சினை இன்னும் முடியவில்லை என்பதும், எதிர்காலத்தில் இதைவிடவும் பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் விதத்தில் பிரச்சினைகள் வளர்ச்சியடையக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதும் தெரிகிறது. அது மாத்திரமல்ல, இந்த கோபமூட்டலின் பின்புலத்தில் வங்குரோத்து முதலாளித்துவ ஆட்சியாளர்கள் செயற்படுவதும் தெரிகிறது.

தற்போதைய நிலைமையை எடுத்துக் கொண்டால், வெறுமனே காலத்தைக் கடத்திக் கொண்டும், கண்காணித்துக் கொண்டும் இருக்க வேண்டிய நேரம் இதுவல்ல. ஒரு பக்கத்தில், தமிழ் நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையில் கசப்புணர்வுகள் உருவாகியிருக்கின்றன. ஏப்ரல் 2ம் திகதி கமலஹாசன், ரஜனிகாந்த் விஜய் உள்ளிட்ட தென்னிந்திய கலைஞர்கள் சத்தியாக்கிரகத்தில் ஈடு பட்டமை இந்த கசப்புணர்விற்கு சிறந்த உதாரணமாகும். சிங்கள எதிர்ப்பின் மூலமே தனது பிரச்சினைகளுக்கு தமிழ்நாடு தீர்வுகான விளைகிறது. அது, தென்னிந்தியாவில் தங்கியுள்ள சிங்களவர்களையும், பௌத்த தேரர்களையும் தாக்குமளவிற்கு நிலைமை வளர்ந்திருக்கிறது. அதற்கு ஒப்பாக, முஸ்லிம் எதிர்ப்பிற்கு மத்தியில் தமிழ் எதிர்ப்பும், இந்திய எதிர்ப்பும் தலை தலையெடுத்து வளர்ந்துக் கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டில் சிங்கள எதிர்ப்பைப் போன்றே, இலங்கையில் முஸ்லிம் எதிர்ப்பம் தமிழ் எதிர்ப்பும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இலங்கை மற்றும் தமிழ் நாட்டுக்கிடையிலும், முஸ்லிம் சிங்கள மக்களுக்கு மத்தியிலும் ஏற்பட்டிருக்கும் கசப்புணர்வு பேரழிவை நோக்கி இட்டுச் செல்வதை இந்த முதலாளித்துவ ஆட்சியாளர்களாலும், அவர்களுக்கு ஆலவட்டம் வீசும் அதிகார வர்க்கத்தாலும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபம் என்ற நிலைப்பாட்டில் அவர்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைக்கு சரியான தீர்வைக் கண்டு அதனை தடுத்து நிறுத்தக் கூடிய சக்தியும் திட்டமும் இடதுசாரிகளிடம் மாத்திரமே உண்டு. இவ்வாறான பேரழிவுகளிலிருந்து சமூகத்தை மீட்டெடுக்கக் கூடிய தெளிவான கண்ணோட்டம் உண்மையான இடதுசாரிகளிடமே இருக்கிறது. ஆகவே இந்த பிரச்சினைகளுக்கு மத்தியில் உங்களுக்கும் ஒரு பாத்திரம் இருக்கின்றது. வெறுமனே பார்வையாளர்கள் என்ற நிலையிலிருந்து விடுபட்டு பொது மக்களோடு கலந்து மனநிலைகளை மாற்றுவதன் மூலமே அந்த பாத்திரத்திற்கு உயிரூட்ட முடியும். ஆகவே இந்த சமூக முறையை மாற்றியமைக்காத வரை இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. எனவே, வெடிக்கப்போகும் எரிமலையின் அடிவாரத்தில் நிலவும் பயங்கர அமைதியை முடிவுக்கு கொண்டுவர வேண்டும். அமைதியாக பார்த்துக் கொண்டிராமல், அதற்காகப் போராட முன்வர வேண்டும்.

### மாரக்ஸியம்... 5ம் பக்கத் தொடர்ச்சி

இயங்கியலை, மார்க்ஸ் அழகாகவே எடுத்துக் காட்டுகின்றார். உடல், நிலம், உழைப்பு என்ற மூன்று வெவ்வேறு தளத்தில், வெவ்வேறு கால கட்டத்தில் மனிதன் அந்நியமான போது, மனிதனின் நிலை இதுதான். தனிவுடமை இது சமூக அமைப்பின் வெட்டு முகம். உடல், நிலம், உழைப்பை, மனிதன் மீண்டும் தனதாக்கும் போது பொதுவுடைமை உருவாகும். அது வர்க்கமற்ற அமைப்பாக மட்டும் தான் இருக்கும். மனித போராட்டங்கள் தன் உடல், நிலம், உழைப்பை பாதுகாக்கும் போராட்டமாகவும், மீள பறித்தெடுக்கும் போராட்டமாகவும் இருப்பதை அடிப்படையாக கொண்டு தான், மார்க்ஸ் தனிவுடமையிலான மனித வரலாற்றை வர்க்கப் போராட்ட வரலாறாக எடுத்துக் காட்டுகின்றார்.

தனிவுடைமைக்கு முந்தைய அமைப்பில் இயற்கை சார்ந்த பொருள் பற்றிய மனித அறிவு விருத்தியான போது, உழைப்பும் வேறுபடத் தொடங்கியது. பொருள் பற்றிய அறிவும் வேறுபடத் தொடங்கியது. அதற்கு இடையிலான மனித உறவுகள் வேறுபடத் தொடங்கியது. உழைப்பும், உழைப்பு சார்ந்த அறிவும் மனிதரிடையே பிரிந்து தனிமனிதனின் தனி உரிமையான போது, வர்க்க அமைப்பு தோன்றுகின்றது. வர்க்கம் சார்ந்ததாக அறிவு மாறுகின்றது. சமூக உடமையிலான சமூக அமைப்பு, தனிவுடமை சமூகமாகியது. தனிவுடமை அமைப்பின் முரண்பாடுகள் என்பது, சமூக முரண்பாடுகளாக வர்க்க முரண்பாடுகளாக மாறியது. இதை முழுமையாக முரணற்ற வகையில் விளக்கி நிற்பதே சமூக விஞ்ஞானம். ஒட்டுமொத்த உற்பத்திக்கும் அதன் மீதான உழைப்புக்கும் இடையிலான உறவுகளையும், அது உருவாக்கும் சமூகக்கூறுகளையும் முரணற்ற வகையில் விளக்கும் போது சமூக விஞ்ஞானமாகின்றது. இது தான் மாக்சியம்.

மார்க்ஸ் கூறியது போல் ”வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்திச் செய்யும் முறைதான் வாழ்க்கையின் சமுதாய, அரசியல், அறிவியல் போக்குகளை நிர்ணயிக்கிறது.” இதைத் தாண்டி அல்ல. வர்க்கமற்ற சமூக அமைப்பில் சமூகம் சார்ந்ததாக இருந்த அறிவு, வர்க்க அமைப்பில் வர்க்கம் சார்ந்ததாக பிரிந்துவிடுகின்றது.

### மகத்தான.... 4ம் பக்கத் தொடர்ச்சி

அரசாங்கத்தினதும் அதன் எதிரிக் கட்சியான முதலாளித்துவ எதிர்க்கட்சியினதும், சோஷலிஸ வேடதாரிகளினதும் ஒத்துழைப்போடு இரும்புக் கரம் கொண்டு அடக்கப்பட்டாலும் அதனை இலேசாகக் கருதிவிட முடியாது. அது இலங்கை மக்கள் மத்தியில் புதிய கருத்தாக்கத்தை ஏற்படுத்தியது. மக்களுடைய சிந்தனையில் மாற்றத்தைக் கொண்டுவர காரணமாக இருந்தது. எதிர்கால சமுதாயத்திற்கு புதிய கலாச்சாரத்தை அறிமுகப்படுத்தியது. அந்த போராட்டத்திற்குப் பின்னர்தான் சோஷலிஸம் என்றால் என்ன என்பதை மக்கள் சிந்திக்கத் துவங்கினார்கள். முதலாளித்துவ கொள்ளையையும், அதன் கொடூரமான சுரண்டலையும், உழைப்பின் வலிமையையும், அடக்குமுறையின் வடிவங்களையும், உரிமைகளையும் உணரத் தொடங்கினார்கள். ஆகவே 71 புரட்சி என்பது அரசாங்கத்தின் இரும்புக் கரங்களால் அடக்கப்பட்ட தோல்வி என குறைத்து மதிப்பிடப்படாமல், மக்களை சிந்திக்கத் தூண்டிய, மக்களுக்கு புதிய அனுபவங்களைத் தந்தது மாத்திரமல்லாமல் புதிய படிப்பினைகளை பெற்றுத் தந்த மகத்தான தோல்வி என்றே மதிக்க வேண்டியுள்ளது.

ஏப்ரல் புரட்சி சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் அரசியல் மதிப்பீடகளை செய்யும்போது, அந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட வர்க்க சக்திகளினதும், அந்த வர்க்க சக்திகளினது அரசயில் பக்குவம் குறித்தும் ஆராயமல் செல்ல முடியாது. ஏனென்றால் எந்தவொரு சமூக அரசியல் போராட்டமும, அதில் ஈடுபடும் வர்க்க சக்திகளின் தன்மையின் மீது தீர்மானிக்கப்படுதனால்தான்.

# போராட்டம்

400/2, தலவத்துகொட பாதை, மாதிவெல, கோட்டே
தொலைபேசி/தெலைநகல்: 094-112799432
mpssrilanka@gmail.com
http://www.peoplesstruggle.com


## மரத்திலிருந்து விழுந்தவனை அரசாங்கம் முட்டியது

சித்திரைப் புத்தாண்டை கொண்டாடிய மக்களுக்கு, கொண்டாட்டங்கள் ஓய்வதற்கு முன்பாகவே “ஷெ ாக்”கான செய்தியொன்றை அரசாங்கம் வெளியிட்டது. 20ம் திகதியிலிருந்து அமுலுக்க வரும் விதத்தில் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்ற செய்திதான் அது. மின்சாரத் அதிர்ச்சியிலுருந்து மக்கள் இன்னும் மீளாத நிலையில், பஸ் கட்டணமும் அதிகரிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை தனியார் பஸ் உரிமையாளர்களின் பக்கத்திலிருந்தும் கேட்கத் துவங்கியுள்ளது.

மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படும் பட்சத்தில் நாட்டின் அனைத்து துறைகளையும் அது பாதிக்கும். அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் விலை அதிகரிப்பதோடு, சேவைகள் மற்றும் உற்பத்தித் துறைகளில் பாதிப்பை ஏற்படுத்தும். அடிக்கடி எரிபொருள் விலையை அதிகரித்த அரசாங்கம், புத்தாண்டு பரிசாக மக்களுக்கு இந்த மின்சாரக் கட்டண அதிகரிப்பை கொடுத்திருக்கிறது. இதனால் பெருமளவு கஷ்டத்தில் தள்ளப்படுவது வறிய மக்கள் தான். பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலையேற்றத்தை தவிர்க முடியாது. அதேபோன்று ஏனைய அத்தியாவசியப் பொருட்களின் விலையும் தானாகவே அதிகரித்துவிடும். இந்த நிலையில் மக்கள் என்ன செய்யப் போகிறார்கள்?

மின்சாரத்திற்கான உற்பத்திச் செலவை ஈடுகட்டுவதற்காகவே மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டதாக அரசாங்கம் கூறுகிறது. இந்த மின் கட்டண அதிகரிப்பு சம்பந்தமாக அரசாங்கம் நுகர்வோர் பாதுகாப்பு ஆனையத்திடம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். ஆனால், அப்படி எதுவும் செய்ததாக தெரியவில்லை. எவ்வித கட்டுப்பாடுளும் இல்லாமல் ஊதாரித்தனமாக செலவு செய்யும் அரசாங்கமும், மின்சார சபையும் அது குறித்து மக்களிடம் கருத்துக் கணிப்பொன்றை மேற்கொள்வதுமில்லை. அரசாங்கத்தின் பெரும்பாலான கொடுக்கல் வாங்கல்கள் போட்டி விலை கூறல் இல்லாமல், செலவு கூடிய ஒப்பந்தங்கள் மூலமாகவே மேற்கொள்ளப்படுகின்றன. இப்படி தன்னிச்சையாக செலவிட்டு அந்த செலவை ஈடு கட்டிக் கொள்வதற்கு மட்டும் மக்களிடம் கருத்து கேட்பதாக அரசாங்கம் பாசாங்கு செய்கிறது. மக்கள் கருத்து கூறினாலும் கூறாவிட்டாலும் அரசாங்கம் தான் நினைத்ததையே செய்கிறது.

பொது மக்களின் கண்களில் மண்ணைத்தூவி விட்டு அடிக்கடி அத்தியாவசியப் பொருட்களின் வரியை அதிகரித்து வந்த அரசாங்கம், இந்த மின் கட்டண அதிகரிப்பின் மூலம் ஒடுக்கப்பட்ட மக்களின் தலையில் பாராங்கல்லை தூ க்கிப் போட்டுள்ளது. உற்பத்தித் துறைகளில் ஏற்பட்டுள்ள மின் கட்டண அதிகரிப்பு உற்பத்திப் பொருட்களோடு சேர்க்கப்படுவதாலும், வியாபாரிகள் அவர்களுக்கு விதிக்கப்படும் வரிகள், மின் கட்டணம் மற்றும் ஏனைய வரிகளையும் தமது விற்பனைப் பொருட்களோடு சேர்ப்பதனாலும் பாவனைப் பொருட்களின் விலை மேலும் மேலும் அதிகரிக்கின்றது. இந்த அனைத்து சுமைகளும் பொது மக்களின் தலையிலேயே விழுகிறது.

மின்கட்டணம், பஸ் கட்டணம், பணவீக்கம், வரி போன்றவற்றால் வாழ்க்கையை பறிகொடுத்து தவிக்கும் பாட்டளி மக்கள் திக்குமுக்காடிப் போயிருக்கின்றனர். இந்த நிலையில் அடுத்த ஜனவரி வரை மின் கட்டணத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என்று அரசாங்கத்தின் ஊடகப் பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல கூறுகிறார். இதன் மூலம் அடுத்த வருடமும் மின் கட்டணத்தால் மக்களுக்கு அதிர்ச்சியை தரப்போவதை சூசகமாக கூறுகிறார் போலும். ஆகவே நாட்டில் என்ன நடக்கும் என்று யாருக்குமே தெரியாது. மக்கள் விழிப்போடு இருந்து இந்த சர்வ வல்லமை பொருந்திய சர்வாதிகார முதலாளத்துவம் நாட்டிலிருந்து துடைத்தெறியும் நாள் மக்களின் சிந்தனை மாற்றாத்தால் தான் தீர்மானிக்கப்படும்.

## "71ன் மகத்தான தோல்வி " நிகழ்வுகள்

1971 ஏப்ரல் மாதம் யாருமே எதிர்ப்பார்த்திராத நேரத்தில் புரட்சியொன்று வெடித்தது. முதலாளித்துவத்திற்கும் அதன் சுரண்டல் கலாச்சாரத்திற்கும் எதிராக முற்போக்கு சிந்தனை கொண்ட இந்நாட்டு இளைஞர்கள் ஆயுதத்தைக் கையிலெடுத்து முதலாளித்துவ பொருளாதார முறைக்கு எதிரா-கப் போராடினார்கள். அரசாங்கம் இரும்புக் கரம் கொண்டு அந்த போராட்டத்தை அடக்கினாலும், அந்த போராட்டம் சமூகத்திற்கு அநேகமானவற்றை கற்றுத்தந்து. முதலாளித்துவ ஆட்சியாளர்களையும் அதன் அடிவருடிகளையும் நடுங்க வைத்த அந்த கிளர்சி நாட்டு மக்கள் மத்தியில் புதிய சிந்தனையோட்டத்தை ஏற்படுத்தக் காரணமாயிருந்தது.42 வருடங்களுக்கு முன்னர் தீரமிக்க அந்த இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்ட அந்த போராட்டம் கற்றுத்தந்த படிப்பினைகளை சமூகத்தின் முன்னிலையில் ஆய்வுக்கு உட்படுத்தும் நோக்கில் இலங்கையிலும், உலகின் பல்வேறு இடங்களிலும் “71 மகத்தான தோல்வி, தாமதமான வாசிப்பு” என்ற தொனிப் பொருளில் நடைபெற்ற நிகழ்வுகளின் படங்கள் கீழே காணப்படுகின்றன.

► காலி





► புரட்சிகர மாணவர் சங்கம்



► கண்டி



► லண்டனம




► குருநாகல்



► இத்தாலி



► அம்பாந்தோட்டை



► களுத்துறை



► கேகாலை



► கொழும்பு




கோட்டே, மாதிவெல, தலவத்துகொட பாதை, இலக்கம் 400/2ல் வசிக்கும் ஜுட் சில்வா புள்ளே ஆகிய என்னால் கடவத்தை, கோனஹேன பாதை, சத்தர்மதிலகாராம மாவத்தையில் அமைந்துள்ள ஸ்பெக்ட்ரா எட்வடைசிங் நிறுவனத்தில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.